KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR
EXPERIENCE
(011) 250 0823

Follow us:
# தமிழன்
THAMILAN தமிලන්
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர்: 05, இதழ்: 229 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(13.05.2025) ஹிஜ்ரி 1446, துல்கஃதா - 14, 0115 886187- விலை ரூ.50 பக்கங்கள் 12

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR
EXPERIENCE
(011) 250 0823

## உள்ளூராட்சித் தேர்தலும் சிறுபான்மை சமூகமும்



பக்கம் 04

## பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைக்கு ஆதரவு கிடையாது



ரவூப் ஹக்கீம் உறுதி

பக்கம் 09

## இந்தியா – பாகிஸ்தான் இடையே போர் நிறுத்த பேச்சு ஆரம்பம்!



பக்கம் 10

## 16ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் ஐ.பி.எல். 2025?



பக்கம் 12




# பிராந்தியத்தில் இந்தியா வலுவடைய வேண்டும்!

## பொருளாதார வளர்ச்சியும் பயங்கரவாதத்தை எதிர்கொள்வதும் ஒரே நேரத்தில் தொடர வேண்டும் என்கிறார் ரணில்

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சியும் பயங்கரவாதத்தை எதிர்கொள்வதும் ஒரே நேரத்தில் தொடர வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

"பயங்கரவாதத்தை எதிர்கொண்டு மகாவலி மேம்பாட்டுத் திட்டத்தை செயற்படுத்தவும் முதலீட்டு வலயங்களை அமைக்கவும் நாங்கள் உறுதியளித்தோம். இந்தியா உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக... » 02 பக்கம்

## 388 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

வெசாக் தினத்தை முன்னிட்டு பல்வேறு குற்றங்களுக்காக சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்த 388 பேருக்கு நேற்று (12) விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

அரசியலமைப்பின் 34ஆவது உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இந்த விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் சிறைச்சாலை ஆணையாளர் காமினி பீ.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்ட 388 பேரில் பெண்கள் நால்வர் அடங்குவதுடன், மிகுதி 384 பேர் ஆண்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

சகல சிறைச்சாலைகளிலுமிருந்து மொத்தமாக 388 கைதிகள் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். » 02 பக்கம்



படப்பிடிப்பு: இஷான் சஞ்சீவ



## உஷ்

கொழும்பு மாநகர சபையைக் கைப்பற்ற தேசிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் சக்தியும் முயற்சிகளை எடுத்து வருகின்றன.

சுயேச்சைக் குழுக்களை சந்தித்து தேசிய மக்கள் சக்தி பேசும் அதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியும் அதே குழுக்களை அரவணைக்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

தமிழர் ஒருவருக்கு பிரதி மேயர் பதவியை வழங்க முயற்சிக்கிறது தேசிய மக்கள் சக்தி. யார் மேயராவார் என்பது இந்த வாரம் தெரியவரும்.




தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்றும் (12) மக்களால் எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பெரும் எண்ணிக்கையிலான பொலிஸாரும் கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆட்சி பலம் இல்லாத சபைகளிலும் தே.ம.ச. ஆட்சி



கொழும்பு மாநகர சபையில் பல தரப்பு ஆதரவு

» 02பக்கம்

## கொத்மலை கோர விபத்து; 40 பேருக்கு தொடர் சிகிச்சை



கொத்மலை, இறம்பொடை, கெரண்டி எல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் (11) இடம்பெற்ற பஸ் விபத்தில் காயங்களுக்குள்ளான 40 இற்கும் அதிகமானவர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுவருகின்றனர். சிகிச்சை பெற்றுவருபவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. » 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்



தேர்தலுக்கு முதல் வெசாக் வந்திருக்கோணும்... நாடெல்லாம் தானசாலைகளா இருந்திருக்கும் பாருங்கோ...

## தமிழரசுக் கட்சி மீதான வழக்கின் இழுபறிக்கு யார் காரணம்?

### விளக்குகிறார் சுமந்திரன்



“இலங்கை தமிழரசுக் கட்சிமீது வழக்குத் தொடர்வதற்கான காரணம் நான் என்ற குற்றச்சாட்டை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் சகலரும்... » 02 பக்கம்

# மின்சார சபை தலைவர் பதவி விலகவில்லை

## மறுப்பறிக்கையை வெளியிட்டது அமைச்சு

மின்சார சபையின் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாப்பிட்டிய தனது பதவியிலிருந்து விலகியுள்ளதாக வெளியாகிய தகவல் உண்மைக்குப்புறம்பானது என்று அமைச்சு மறுப்புத் தெரிவித்துள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு வெளியிட்டுள்ள மறுப்பறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மின்சார சபையின் தலைவர் திலக் சியம்பலாப்பிட்டிய வெளிநாடு செல்வதற்காக குறுகிய காலத்துக்கான விடுமுறையொன்றை மட்டுமே பெற்றுக்கொண்டுள்ளார். குறித்த விடுமுறைக்கான அனுமதி கோரியே அவர் கடிதமொன்றைச் சமர்ப்பித்துள்ளார். மற்றும்படி அவர் தனது பதவியிலிருந்து விலகவில்லை.

வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு அவர் மீண்டும் மின்சார சபையின் தலைவர் பதவியில் தொடர்வார் என்றும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வெசாக் தினத்தை முன்னிட்டு வெலிகடை சிறைச்சாலை கைதிகள் பலர் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டு, சிறைச்சாலையிலிருந்து வெளியேறினர். (படப்பிடிப்பு - இஷான் சஞ்சீவ)

# கொழும்பு துறைமுக ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு; ரூ.300 மில். நட்டம்

கொழும்பு துறைமுகத்தின் ஜெயா கொள்கலன் முனையம் மற்றும் கிழக்கு கொள்கலன் முனையங்களில் நேற்று இரவு ஊழியர்கள் மேற்கொண்ட நான்கு மணி நேர பணிப்புறக்கணிப்பால் 300 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தகவல்களின்படி, வெசாக் தின விடுமுறை நாட்களுடன் இணைந்த மே 12 மற்றும் 13 ஆகிய திகதிகளில் பணிபுரிந்த அத்தியாவசிய ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புத்தொகையை குறைப்பதற்கு, துறைமுக அதிகாரசபை எடுத்த சர்ச்சைக்குரிய முடிவை அடுத்தே இந்த பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

நேற்று இரவு 8 மணிக்கு ஆரம்பித்து நள்ளிரவு வரை இந்தப் பணிப்புறக்கணிப்பு தொடர்ந்தது. எனினும், முறைப்படி மேலதிக நேர கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று நிர்வாகம் தெரிவித்ததை அடுத்து, நள்ளிரவு 12.30 மணியளவில் தொழிலாளர்கள் மீண்டும் பணிகளை ஆரம்பித்தனர்.

ஏப்ரல் 12ஆம் திகதி பௌர்ணமி தினத்தன்று செய்யப்படும் பணிகளுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகளை 10,000 ரூபாவாகவும் அடுத்த நாள் கொடுப்பனவை 5,000 ரூபாவாகவும் குறைப்பதென்று முன்னதாக துறைமுக நிர்வாகம் முடிவெடுத்திருந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருடர்கள்-குற்றவாளிகளுடன் கைகோர்க்க மாட்டோம்

## சந்திம வீரக்கொடி தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தைப் பிடித்துக் கொள்வதற்காக திருடர்கள் மற்றும் குற்றவாளிகளுடன் கூட்டிணையப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் கூடுதலான இடங்களில் ஆளுங்கட்சியோ எதிர்க்கட்சியோ பெரும்பான்மையைப் பெறாத நிலையில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

அவ்வாறான இடங்களில் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஏனைய தரப்புகளுடன் இணைந்து ஆட்சியமைப்பதில் எதுவித தவறும் இல்லை.

எனினும் அவ்வாறு கூட்டுச் சேரும்போது திருடர்கள், பாதாள உலகக்கும்பல்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் குற்றப் பின்னணி கொண்டவர்களுடன் கூட்டிணைவதில்லை என்ற நிலைப்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாக இருப்பதாக சுட்டிக்காட்டினார்.

## ஆட்சிப்பலம் ...

"உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் 50 சதவீதம் ஆட்சி அதிகாரம் கிடைக்காத சபைகளிலும் தேசிய மக்கள் சக்தியே நிச்சயமாக ஆட்சியமைக்கும். தற்போது வரையிலும் பல்வேறு குழுக்கள் எங்களுடன் கலந்துரையாடி இருக்கிறார்கள். கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக கூறியிருக்கிறார்கள். எனவே, கொழும்பு மாநகர சபையில் உறுதியாக நாங்களே ஆட்சியமைப்போமென்று" அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டாத்தில் நேற்று முன்தினம் (11) இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், ஆட்சி அதிகாரம் இருந்தும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரச சொத்துக்களை நாங்கள் முறைக்கேடாக பயன்படுத்தவில்லை. இதுவே மக்களுக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும்.

தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்துக்கு முன்பாகவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சியும் இருக்கிறது. ஆனால், அந்தக் கட்சி அலுவலகம் மூடப்பட்டே இருக்கிறது. ஆனால் அவர்கள் ஆட்சியிலிருந்திருந்தால் இந்த அலுவலகத்தை முன்னெடுத்துச் செல்ல அனுமதியளித்திருப்பார்களா என்று கூற முடியாது. அதற்காக நாங்கள் அவர்களின் கட்சி செயற்பாடுகளுக்கு எந்த இடையூறும் ஏற்படுத்தவில்லை. புதிய அரசியல் கலாசாரத்தை எங்களின் செயற்பாட்டை காண்பித்துள்ளோம்.

சகல தேர்தல்களும் நிறைவடைந்துள்ளன. எங்களின் கொள்கை பிரகடனத்துக்கமைய ஐந்து வருடங்களில் நாட்டை கட்டியெழுப்புவதற்கான பணிகளை முன்னெடுத்துச் செல்வதே எங்களின் நோக்கமாகும். உள்ளூராட்சி மன்றங்களையும் கைப்பற்றியுள்ளோம்.

இந்த தேர்தல் முடிவுகளுக்கமைய தனியாக ஆட்சி அமைப்பது சிக்கலான விடயமாகும். உண்மையில் அந்த நிறுவனங்களில் வெற்றியடைந்துள்ளோம். இருந்தபோதும் ஏனைய கட்சிகளுக்கும் ஓரளவு ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. வேறு கட்சிகளுக்கு கிடைத்த சகல ஆசனங்களும் எதிர்க் கட்சிக்குரியது மாத்திரமல்ல. அதனையும் புரிந்துகொள்ள வேண்டும். தேசிய மக்கள் சக்தி அதிக வாக்குகளை பெற்றுக்கொண்டுள்ளது.மக்களும் பெரும் அதிகாரத்தை தேசிய மக்கள் சக்திக்கு கொடுத்துள்ளார்கள், நாங்களே வெற்றியடைந்துள்ளோம் என்பதை வெளிப்படுத்த முயற்சிக்கிறார்கள். ஒருசிலர் ஏனைய சகல கட்சிகளும் எதிர்க் கட்சிகளென்று கூறுகிறார்கள்.

சுயாதீனக் குழுக்கள் இருக்கின்றன. வடக்கு மாகாணத்தை எடுத்துக்கொண்டால் வழக்குகள் அதிக பிளவுகள் இருக்கின்றன. அவர்கள் சகலரையும் அரசாங்கத்துக்கு எதிரான எதிர்க் கட்சியாக கூற முடியாது. அவர்களில் அநேகமானவர்கள் தற்போதும் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து நாட்டை கட்டியெழுப்பும் பாதையில் இணைய விரும்புவதாக கூறியிருக்கிறார்கள்.

கிராம் அதிகாரத்தை உருவாக்குவதற்காகவும் நகர அதிகாரத்தை உருவாக்குவதற்காகவும் நகர சபை பிரதேச சபைகளில் அதிகாரத்தை உருவாக்குவதற்காகவுமே மக்கள் திசைகாட்டி சின்னத்துக்கு வாக்களித்துள்ளார்கள். எனவே, அந்த மக்கள் ஆணையை முறையாக பயன்படுத்த வேண்டும். அந்த மக்கள் ஆணையை திரிபுபடுத்த இடமளிக்க மாட்டோம். எனவே, சுயாதீனமாக அல்லது வேறு குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தி ஒருசில உள்ளூராட்சி மன்றங்களில் ஆசனங்களை பெற்றுக்கொண்ட சிலர் இருக்கிறார்கள். அதற்கமைய, அரசாங்கத்துடன் இணைந்து பயணிக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

அவர்கள் சகலரின் ஒத்துழைப்பை எங்களால் பெற்றுக்கொள்ள முடியும். எனவே, 50 சதவீதத்துக்கும் பெரும்பான்மை கிடைக்காத உள்ளூராட்சி மன்றங்களிலும் வெற்றிக்கிடைத்த சகல சபைகளிலும் நிச்சயமாக நாங்களே ஆட்சியை அமைப்போம்.

அநேகமானவர்கள் கொழும்பு மாநகர சபையை இலக்கு வைத்துள்ளார்கள். கொழும்பு மாநகர சபையை பொறுத்தவரையில் நாங்கள் அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளோம். 48 ஆசனங்கள் எங்களுக்கு இருக்கின்றன. ஐக்கிய மக்கள் சக்திக்கு 29 ஆசனங்களே இருக்கின்றன. ஐக்கிய மக்கள் சக்திக்கு அதற்கான வாய்ப்பு இல்லை. தற்போது வரையிலும் பல்வேறு குழுக்கள் எங்களுடன் கலந்துரையாடி இருக்கிறார்கள். கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக கூறியிருக்கிறார்கள். எனவே, கொழும்பு மாநகர சபையில் உறுதியாக தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும் என்றார்.

## தமிழரசுக் ...

யாப்புக்கு முரணாக செயற்பட்டமையினாலேயே வழக்குத் தொடரப்பட்டது என்பதை சகலரும் ஏற்றுக்கொண்டுள்ளோம். எனவே, நான் கூறிய நேரமே பாராளுமன்ற உறுப்பினர் சிவஞான சிறிதரன் கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் வழக்கு இழுபறிநிலை ஏற்பட்டிருக்காது. ஆனால் தற்போது வழக்கு முடிவுக்குக் கொண்டுவராமல் இருக்கக் காரணம் சிறிதரன் மற்றும் யோகேஷ்வரன் ஆகியோரின் வித்தியாசமான நிலைப்பாடே காரணமாகும்" என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய பிரதான கட்சியாக இருந்துள்ளது. சில கட்சிகள் காலத்துக்குக் காலம் இணைவார்கள். பின்னர் விலகுவார்கள். பின்னர் மீண்டும் இணைந்துகொள்வார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது தமிழரசுக் கட்சிக் கூட அதன் கூட்டணியில் இருக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய நான்கு கட்சிகளும் ஒன்றிணைந்தே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி 2001 ஆம் ஆண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இணைந்துகொண்டார்கள்.

அதன் பின்னர் 2010 ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. அதன் பின்னர் ஆனந்த சங்கரியோடு ஏற்பட்ட பிணக்கின் காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணி 2003 ஆம் ஆண்டு வெளியேறியதாக கருதப்பட்டது. இலங்கை தமிழரசுக் கட்சி தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்த ஒரேயொரு கட்சியில்லை. அந்த இடத்தை தமிழரசுக் கட்சி எடுத்துக்கொண்டது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் ஈழ விடுதலை இயக்கமும் தொடர்ச்சியாக இருந்தன.

2011 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி,தமிழ் மக்கள் விடுதலைக் கழகம் என்பன இணைந்து கொண்டன. அதன் பின்னர் 2015 ஆம் ஆண்டு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கட்சியிலிருந்து விலகியது. அதனை தொடர்ந்து இலங்கை தமிழரசுக் கட்சியும் தமிழ் மக்கள் விடுதலைக் கழகமும் தமிழ் ஈழ விடுதலை இயக்கமும் தொடர்ச்சியாக நீடித்தன.

கடந்த பாராளுமன்ற காலப்பகுதியில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தனித்தனியே போட்டியிட்டு பின்னர் கூட்டணி அமைத்தால் இலகுவாக இருக்குமென யோசனையை முன்வைத்தேன். சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இணக்கம் தெரிவித்திருந்தாலும் அந்த யோசனையில் ஏற்பட்ட விளக்கக் குறைவின் காரணமாக தமிழ் மக்கள் விடுதலைக் கழகம், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் என்பன தமிழரசுக் கட்சியுடன் பயணிக்கவில்லை என்று தெரிவித்து ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி என்ற பெயரோடு பயணிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அதன் பின்னர் இலங்கை தமிழரசுக் கட்சி நிர்வாகத்தில் தலைமைத்துவ மாற்றம் செய்ய வேண்டியேற்பட்டது. தலைவருக்கான விண்ணப்பங்களை கோரியபோது நானும் அதற்கு விண்ணப்பித்திருந்தேன். சிறிதரன், யோகேஸ்வரன் போன்றோரும் விண்ணப்பித்திருந்தார்கள். தமிழரசுக் கட்சிக்குள் முதல் முறையாக போட்டிவந்தது தலைவர் தெரிவின்போதே. இறுதி நேரத்தில் யோகஸ்வரனே தனக்கு யாரும் வாக்களிக்க வேண்டாம், வாக்களிப்பவர்கள் சிறிதரனுக்கே வாக்களியுங்கள் என்று கூறிவிட்டார். வாக்களிப்பில் சிறிதரனுக்கு 184 வாக்குகளும் எனக்கு 137 வாக்குகளும் கிடைத்திருந்தன. அதன் பின்னர் கட்சித் தலைவராக சிறிதரனை அறிவித்திருந்தோம்.

அதனை தொடர்ந்து கட்சியின் மற்றைய உறுப்பினர்கள் தெரிவு தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கான பட்டியை நானும் சிறிதரனுமே தயாரித்தோம். அந்த பட்டியலையே சிறிதரன் கட்சி பொதுச் சபைக்கு சமர்ப்பித்தார். பொதுச் சபையிலும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. நான் பொதுச் செயலாளர் பதவியை கேட்டதாகவும் கூறப்பட்டது. அது முழுமையாக தவறான கருத்தாகும். இந்த விடயங்கள் தொடர்பில் நாங்கள் கலந்துரையாடுகையில் கட்சி இரண்டாக பிளவடைந்துள்ளது போன்றுள்ளது. இதனை சரிசெய்ய வேண்டுமென்றால் நீங்கள் தலைவராக இருக்கும்போதும் நான் செயலாளராக இருக்கவேண்டும் என்று சிறிதரனுக்கு தெரிவித்திருந்தேன். ஆனால் என்னால் வருவதை செயலாளராக இருக்க முடியாது. மீண்டும் மத்தியக் குழுவில் இதுதொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தினோம். அதன்போது கிழக்கிலிருந்து பொதுச் செயலாளராகவும் ஒருவரை பிரேரிப்பதாக குறிப்பிட்டிருந்தேன். அதனை தொடர்ந்து குகதாசனை பொதுச் செயலாளராக நியமித்தோம். அதனை தொடர்ந்து நானும் சிறிதரனும் இணைந்தே கட்சியின் ஏனைய உறுப்பினர்களையும் நியமித்தோம். அந்த இணக்கப்பாட்டையே சிறிதரன் பொதுச் சபையில் தன்னுடைய முன்மொழிவாக அறிவித்தார். அதன்போது எழும்பிய பீட்டர் இளஞ்செழியன் அதனை வழிமொழிந்துவிட்டு பிரிவுகள், பொதுச் சபை எண்ணிக்கை என்பன தவறு. யாப்புக்கு முரணானது என்று தெரிவித்து நீதிமன்றம் போக எண்ணியுள்ளதாகவும் தெரிவித்தார். அத்தோடு எங்கள் இருவருக்கு இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டிருந்தால் இதனை நான் வழிமொழிகிறேன். இந்த முன்மொழிவுக்கு இணக்கப்பாடு ஏற்படவில்லை என்றால் நான் நீதிமன்றம் செல்ல மாட்டேன். நிறைவேற்றப்படாவிட்டால் நான் நீதிமன்றம் செல்வேன் என்று பகிரங்கமாக அறிவித்தார்.

இறுதியில் பகிரங்கமாக நிறைவேற்றப்பட்டதாக தெரிவித்து, பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதில் சிக்கல் ஏற்பட்டதன் பின்னர், ஏற்கனவே கூறியது போன்று பீட்டர் இளஞ்செழியன் நீதிமன்றம் சென்று தடையுத்தரவை பெற்றுக்கொண்டார். கட்சி மாநாடு தொடர்பில் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது. அதன்போது நிலைமை முழுமையாக மாறிவிட்டது. ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கேள்வி எழுப்பி, வாக்குவாதம் இடம்பெற்று அவர்களே வாக்கெடுப்பையும் கோரினார்கள். வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. சிறிதரனின் யோசனைக்கு 112 வாக்குகளும் எதிராக 104 வாக்குகளும் கிடைத்தன. பின்னரே மாநாட்டை நடத்துவது தீர்மானிக்கப்பட்டது. அதிலேயே சிறிதரன் தலைவர் பொறுப்பை ஏற்கவும் இருந்தார். பேச்சாளராக இந்த விவரங்களை ஊடகங்களுக்கு அறிவித்து கொண்டிருந்தபோதே மாநாட்டை காலவரையறையின்றி பிற்போட சேனாதிராஜா தீர்மானித்துவிட்டதாக என்னிடம் ஒருவர் கூறினார். அதற்கு காரணம் சிலர் குழப்புவதால் அவர்களை சமாதானம் செய்துவிட்டு முடிவுக்கு வரலாம் என்று அவர் தீர்மானித்திருந்தார்.

பின்னர் நானும் சிறிதரனும் சேனாதிராஜாவை சந்தித்து உடனடியாக அடுத்த வாரமே மாநாட்டை நடத்தி சிறிதரனை தலைவராக அறிவியுங்கள் என்று கோரினோம். சிறிதரனும் பின்னடைந்து விட்டார். இறுதியில் இந்த பழி என்னுடைய தலையில் வருமென்று எண்ணியே தலைவர் பதவியை உடனடியாக ஏற்றுக்கொள்ளுமாறு அறிவித்து ஜனவரி 31 ஆம் திகதி சிறிதரனுக்கு எழுத்து மூலம் கடிதம் எழுதினேன். ஆனால் அவர் அதனை செய்யவில்லை. அந்த இடைப்பட்ட காலப்பகுதியில் இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அந்த வழக்குகள் இன்னும் நிலுவையில் இருக்கின்றன.

கட்சி யாப்பின் பிரகாரம் பொதுச் சபை ஆகக் கூடியது 156 உறுப்பினர்களை கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு இருக்கையில் 326 பேர் வாக்களித்திருக்கிறார்கள். என்னுடைய சம்மதத்துடனேயே இது இடம்பெற்றது. அதிகமான மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் இது இடம்பெற வேண்டியது நன்மையாகும் என்பதன் காரணமாகவே மத்திய செயற்குழுவில் யாப்பை திருத்தினால் பிரேரணையொன்றை முன்வைத்து அதனை நிறைவேற்றியிருந்தோம். அதனை காரணம் காட்டியே இந்த வழக்கில் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனை சகலரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். நீதிமன்றத்துக்குச் சென்று மனுதாரின் கருத்து சரியென்று கூறி வழக்கு ஏட்டில் கையொப்பமிட்டுள்ளார்கள்.

எங்களின் பிரேரணை சட்ட வரையற்றதாக இருந்தாலும் பிரேரணையை நிறைவேற்றியே இந்த தீர்மானத்தை எடுத்தோம் என்பதை நீதிமன்றமத்துக்கு சொல்ல வேண்டும் என்பதை அரசியல் குழுவும் ஏற்றுக்கொண்டது. பின்னர் கட்சிக்கும் சொல்லாமல் முற்றிலும் வித்தியாசமான முன்மொழிவு நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. அதன் காரணமாகவே வழக்கு இன்னும் இழுபறிநிலையிலேயே இருந்திருக்காது. நான் கூறிய நேரமே சிறிதரன் கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் வழக்கு இழுபறிநிலை ஏற்பட்டிருக்காது. நாங்கள் சகலரும் யாப்புக்கு முரணாக செயற்பட்டமையினாலேயே வழக்குத் தொடரப்பட்டது. ஆனால் தற்போது வழக்கு முடிவுக்கு கொண்டுவராமல் இருக்க காரணம் சிறிதரனும் யோகேஷ்வரனும் வித்தியாசமான நிலைப்பாடே காரணமாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## 388 கைதிகளுக்கு ...

சிறு குற்றங்களுக்காக கைதுசெய் யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்தவர்களுக்கே இன்று பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. இவர்களுள் வெலிக்கடை சிறைச்சாலையில் 40 பேரும் வாரியபொல சிறைச்சாலையில் 38 பேரும் அநுராதபுரம் சிறைச்சாலையில் 36 பேரும் மஹர சிறைச்சாலையில் 30 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய சிறைச்சாலைகளிலுள்ள அநேகமானவர்களுக்கும் விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

அதேபோன்று, சிறைச்சாலை கைதிகள் தமது உறவினர்களை சந்திப்பதற்கான வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படுகிறது. இந்த நிகழ்வு நேற்று இடம்பெற்றிருந்ததுடன் இன்றும் (13) உறவினர்கள் கைதிகளை பார்வையிட முடியும். இது திறந்த வருகையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை இந்த திறந்த வருகைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்றார்.

## கொத்மலை...

கதிர்காமத்திலிருந்து நுவரெலியாவினூடாக குருநாகல் வரை பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ், நுவரெலியா – கம்பளை பிரதான வீதி கொத்மலை ரம்பொடை கெரண்டி எல்ல பிரதேசத்தில் வீதியிலிருந்து விலகி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரழந்தனர்.

விபத்தில் காயங்களுக்குள்ளானவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுள் கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைப்பெற்ற சகலரும் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாவலப்பிட்டி வைத்தியசாலையில் இவரையில் ஐவர் சிகிச்சைப் பெற்று வருவதுடன் கம்பளை போதனா வைத்தியசாலையில் 22 பேர் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். நுவரெலியா பொது வைத்தியசாலையில் மேலும் 15 பேர் சிகிச்சைபெற்று வருவதுடன் அவர்களுள் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

உடல் நிலைமையை கவனத்திற்கொண்டு அவர்களுள் சிலரை போதனா மற்றும் கண்டி வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பிராந்தியத்தில்...

மாறப்போகிறதா அல்லது இன்று இருப்பது போலவே இருக்குமா" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

வளர்ந்து வரும் உலக ஒழுங்கில் "பிராந்தியவாதம்" முக்கியமானதாக இருக்கும் என்பதால் தெற்காசிய "மிகவும் சக்திவாய்ந்த பிராந்தியமாக" உருவாவதை உறுதி செய்வதில் இந்தியா முன்னணி வகிக்க வேண்டும் என்ற கருத்தையும் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ளார்.

பெங்களூருவில் த இந்து குழுமம் ஏற்பாடு செய்த "த இந்து ஹடில்" நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ரணில், உலகின் மொத்த 9.8 பில்லியன் மக்கள் தொகையில் தெற்காசியப் பகுதி 2.7 பில்லியன் மக்கள் தொகையைக் கொண்டிருக்கும் என்றும் அதன் ஒருங்கிணைந்த பொருளாதாரம் சுமார் 43 பில்லியன் டொலர்களாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

"இந்தப் பகுதியில் உங்களுக்கு மூன்று அணுசக்தி சக்தி நிலைகள் இருக்கும். இது உலகின் மிகவும் சக்திவாய்ந்த பிராந்தியமாக இருக்கும்" என்று அவர் கூறினார். அவர் மேலும் கூறியதாவது ,

"இரண்டாம் உலகப் போரின் முடிவில் நமக்கு ஒரு துருவ உலகம் இருந்தது. அது பின்னர் இருமுனையாக மாறியது (சோவியத் ஒன்றியமும் அமெரிக்காவும் முக்கிய வீரர்களாக இருந்தன) பின்னர் மீண்டும் ஒரு துருவமாக மாறியது. அது மீண்டும் இருமுனையாக மாறி வருகிறது (அமெரிக்காவும் சீனாவும் முக்கிய வீரர்களாக உள்ளன)." 2050 ஆம் ஆண்டுக்குள் அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகியவை முக்கிய பங்கு வகிக்கும். குறிப்பாக இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. புவிசார் அரசியல் ஒரு பெரிய மாற்றத்தைக் காண்கிறது

"அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உலக வர்த்தக அமைப்பை சீர்குலைத்துள்ள ஒரு உலகத்தை நாம் காண்கிறோம். அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட உலகளாவிய ஒழுங்கை அவர் சவால் செய்துள்ளார். இது பூனை கோழிக்குஞ்சை சாப்பிடுவது போன்றது. வளர்ச்சிக்கான இயந்திரமாக நாம் அனைவரும் அமெரிக்காவையே பார்க்கிறோம். ஆனால் அது இப்போது அசைந்துள்ளது. எனவே பிராந்தியவாதம் மேலும் மேலும் முக்கியமானதாக மாறப்போகிறது . அதே நேரத்தில் இந்தியாவின் தலைமையில் தெற்காசியா சக்திவாய்ந்த பிராந்தியமாக உருவெடுக்க வேண்டியதன் அவசியம் உள்ளது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிரச்சினைகளுக்கு மத்தியிலும் பொருளாதார மாற்றம் தொடர வேண்டும். பயங்கரவாதத்தை மீறி வளர்ச்சி தொடர வேண்டும் .

இங்கு பேசிய த இந்து குழுமத்தின் இயக்குனர் என். ராம், தெற்காசியாவிற்கான விக்கிரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வை நம்பிக்கை நிறைந்தது என்று குறிப்பிட்டார். இருப்பினும், பிராந்தியத்தின் ஜனநாயகப் பற்றாக்குறைகள் இருப்பதாக அவர் கவலை தெரிவித்தார்.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் முன்னாள் நிரந்தர பிரதிநிதி டி.எஸ். திருமூர்த்தி மற்றும் த இந்துவின் இராஜதந்திர விவகார ஆசிரியர் சுஹாசினி ஹைதர் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.





வெசாக் போயா தினத்தை முன்னிட்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (12) பிற்பகல் ஹுணுபிட்டியவில் உள்ள கங்காராம விகாரையில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

# தொல்லியல் திணைக்களம் பௌத்த பிக்குகளின் கூடாரமா?

## இனவாதத்தை தூண்டும் பிக்குகளுக்கு எதிராக நடவடிக்கை தேவை

### ரவிகரன் எம்.பி. காட்டம்



(விஜயரத்தினம் சரவணன்)

குருந்தூர்மலை அடிவாரத்தில் தமது பூர்வீக விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் நோக்கில் கடந்த 10ஆம் திகதி அன்று தமிழ் விவசாயிகள் மூவர் பண்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டபோது, தொல்லியல் பகுதிக்குள் பண்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். பௌத்த பிக்குகள் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலேயே பொலிஸார் குறித்த கைது நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில், குறித்த நிலங்கள் முழுவதும் தமிழ் மக்களின் நிலங்கள் எனக் குறிப்பிட்டுள்ள வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், தொல்லியல் பகுதிக்குள் குறித்த விவசாயிகளால் பண்படுத்தல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தால்கூட, அதுதொடர்பில் தொல்லியல் திணைக்களமே முறைப்பாடு செய்திருக்க வேண்டும்மெனவும் இது தொடர்பில் பௌத்த பிக்குகள் முறைப்பாடு செய்வார்களானால் தொல்லியல் திணைக்களம் பௌத்த பிக்குகளது கூடாரமா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்தோடு, இனவாதத்தைத் தூண்டுகின்ற வகையில் செயற்படுகின்ற இவ்வாறான பௌத்த பிக்குகளுக்கெதிராக தற்போதைய ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டு மெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

குருந்தூர்மலைப் பகுதியில் தமிழ் விவசாயிகள் கைதுசெய்யப்பட்ட விவகாரத்தில் பௌத்த பிக்குகளின் அடாவடித்தனமான இனவாதத்தைத் தூண்டுகின்ற செயற்பாடு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை அடிவாரத்தில் காணப்படும் விவசாய நிலங்களில் பண்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் 10.05.2025 சனிக்கிழமையன்று விவசாயிகள் மூவர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட மூவரும் நேற்று முன்தினம் (11) நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, ஒருவர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குருந்தூர்மலை அடிவாரத்தில் காணப்படும் விவசாயக் காணிகள் பூர்வீகமாக தமிழ் மக்கள் விவசாயம் செய்துவந்த காணிகளாகும். இந்நிலையில், தொல்லியல் திணைக்களத்தினர் அடாத்தாக எல்லைக் கற்களையிட்டு அபகரித்து வைத்துள்ளனர்.

குறித்த விவசாய நிலங்களில் கடந்த வருடம்கூட விவசாயிகளால் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிலையில் இவ்வருடமும் குறித்த வயற்காணிகளில் விவசாயம் செய்யும்நோக்கில் பண்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்ட விவசாயிகளே இவ்வாறு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்க நேரடியாகச்சென்று இவ்வாறு கைதுசெய்யப்பட்ட விவசாயிகளைப் பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடியதுடன், எமது விவசாயிகளது சுதந்திரமான தொழில்செய்யும் உரிமை மறுக்கப்படுவது தொடர்பில் எனது வன்மையான கண்டனங்களையும் தெரிவித்திருந்தேன்.

பௌத்த பிக்குகளின் முறைப்பாட்டுக்கமையவே இவ்வாறு பொலிஸாரால் எமது விவசாயிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் காலாகாலமாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவந்த பூர்வீக விவசாய நிலங்களில் தொல்லியல் திணைக்களம் அத்துமீறியே எல்லைக்கற்களையிட்டுள்ளது. அவ்வாறு தொல்லியல் திணைக்களத்தால் அத்துமீறி இடப்பட்ட பகுதிக்குள் பண்படுத்தல் இடப்பட்டிருந்தால் அதுதொடர்பில் தொல்லியல் திணைக்களமே முறைப்பாடு செய்திருக்கவேண்டும். ஆனால் அதுதொடர்பில் பௌத்த பிக்குகளே முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறு பௌத்த பிக்குகள் முறைப்பாடு செய்து பொலிஸார் கைதுசெய்வதெனில், தொல்லியல் திணைக்களம் பௌத்த பிக்குகளின் கூடாரமா எனக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இங்கு தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக் காணிகளைப் பறித்ததோடு மாத்திரமின்றி, அக்காணிகளுக்குரிய தமிழ் மக்கள், வாழ்வாதாரத்துக்காக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிக்கின்றபோது பௌத்த பிக்குகளின் முறைப்பாட்டுக்கமைய பொலிஸாரால் கைதுசெய்யப்படுகின்ற அவலமும் அரங்கேறுகின்றது.

இந்த விடயத்தில் உரியவர்கள் நியாயமாக நடந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறாக இனவாதத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் பௌத்த பிக்குகளுக்கெதிராக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏனெனில், இனவாதத்தை எவரும் வெளிப் படுத்தக்கூடாது. அனைத்து இன மக்களையும் சேர்த்துக்கொண்டு பயணிப்போமென்று கூறிக்கொண்டு ஆட்சிசெய்துகொண்டிருக்கும் தற்போதைய ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் கவனமெடுக்கவேண்டும். இவ்வாறாக இனவாதத்தைக் கக்கிக்கொண்டிருக்கும் பௌத்த பிக்குகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்'' - என்றார்.

# யாழ். வட்டுக்கோட்டை பொலிஸாரால்

## வெசாக் தினத்தில் பால் பாயாசம் தானம்





(பு.கஜிந்தன்)

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ். வட்டுக்கோட்டை பொலிஸார் நேற்று (12) மாலை பால் பாயாசம் தானம் வழங்கினர்.

வீதியில் சென்ற மக்களுக்கு இவ்வாறு பால் பாயாசம் வழங்கப்பட்டது. மக்களும் ஆர்வத்துடன் பால் பாயாசத்தை அருந்திச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொஸ்தா தலைமையில் இந்த தன்சல் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி வழங்கும் நிகழ்வு யாழ். பல்கலையில்





(பு.கஜிந்தன்)

முள்ளிவாய்க்கால் மண்ணில் இறுதி யுத்த நேரத்தில் அங்கிருந்த மக்கள் தமது உயிரை காத்துக்கொள்வதற்காக தயாரித்து அருந்திய முள்ளிவாய்க்கால் கஞ்சியை நினைவுகூரும் முகமாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி வழங்கும் நிகழ்வு நேற்று (12) யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் நோக்கில் இந்த உப்பில்லாத முள்ளிவாய்க்கால் கஞ்சியானது யாழ். வல்வெட்டித்துறை பகுதியில் காய்ச்சி வழங்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் தமிழர் தாயகம் எங்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை தயாரித்து வழங்கும் செயற்பாட்டில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபடவுள்ளனர். அத்துடன் நாளை 14ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழக கட்டட தொகுதியில் இரத்ததான நிகழ்வையும் பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்துள் ளனர்.

மேலும் முள்ளிவாய்க்கால் மண்ணில் மக்கள் அனுபவித்த துயரங்களை எடுத்துக்காட்டும் முகமாக பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் கண்காட்சி ஒன்றினையும் பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.


## Now you can subscribe the following Newspapers

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

**Tel No: - 0112 127 209**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 மே 13ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# ஊருக்கு உபதேசம்!

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் எட்டப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பாராட்டி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க செய்தி வெளியிட்டுள்ளார்.

இந்த முடிவு இரு தரப்பினரிடையேயும் அப்பாவி உயிர்களைக் காப்பாற்றுவதற்கான ஒரு முக்கியமான ஒப்பந்தம் மட்டுமல்ல, நிலையான அமைதி மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மையை அடைவதற்கான முதல் மற்றும் முக்கிய படியாகுமென்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஒரு பெரிய பேரழிவு ஏற்படுவதற்கு முன்பு இந்திய மற்றும் பாகிஸ்தானிய தலைவர்கள் நெருக்கடியைத் தீர்க்க தோட்டாக்களுக்குப் பதிலாக வார்த்தைகளைப் பயன்படுத்த முடிவு செய்து தங்கள் ஞானத்தையும் இராஜதந்திர திறமையையும் வெளிப்படுத்தினர் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் பாகிஸ்தானின் நெருங்கிய அண்டை நாடாகவும் நண்பராகவும் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு அமைதியான தீர்வு காண்பதற்கான ஒரு முக்கிய படியாக இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் இருக்குமென்று இலங்கை நம்புவதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

அத்துடன், இரு நாடுகளுக்குமிடையிலான தற்போதைய உரையாடலை ஆதரிப்பதாகவும் தமது காலத்திலேயே பிராந்திய அமைதியை அடைவதற்குத் தேவையான எந்தவொரு பங்களிப்பையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார தனது செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் பிரச்சினை குறித்தான விடயத்தில் ஜனாதிபதி அநுர பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல் என்பதுபோல் கருத்துகளை வெளியிட்டுள்ளார். இலங்கையில் உள்நாட்டுப்போர் நடந்தபோதெல்லாம் அவற்றை எதிர்த்து அமைதிப்பேச்சுகள் தொடர்பில் அல்லது போர்நிறுத்தம் தொடர்பில் எந்தவிதமான அக்கறையும் காட்டாமல் அவற்றைக் குழப்பும் வேலைகளை மட்டுமே செய்த ஒரு கட்சியின் தலைமை இப்படி மாறியிருப்பதும் ஒருவகையில் நல்ல மாற்றம் தான். ஆனால், பிராந்திய அமைதியும் பாதுகாப்பும் இந்தியா பாகிஸ்தான் பிரச்சினைக்கப்பால் இன்னொரு விடயத்தில்தான் தங்கியிருக்கிறது. அதுதான் சீனாவின் ஆதிக்கம்.

பிராந்தியத்தில் அமைதிக்கான, பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் என்பன பற்றி முதலில் ஜனாதிபதி அறிந்துகொள்ள வேண்டும். இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் புவிசார் அரசியல், பொருளாதாரம் மற்றும் உட்கட்டமைப்புத் திட்டங்கள் மூலம் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்து வருகிறது. இது இலங்கையின் உள்நாட்டு அரசியல், பிராந்தியப் பாதுகாப்பு மற்றும் இந்தியாவுடனான உறவுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனா இலங்கைக்கு கடன்கள் மற்றும் முதலீடுகள் மூலம் பொருளாதார ரீதியாக செல்வாக்குச் செலுத்துகிறது. இலங்கையின் முக்கிய உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு சீனா நிதியுதவி வழங்கியுள்ளது. ஆனால், இந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்த இயலாமையானது இலங்கையை சீனாவின் செல்வாக்குக்கு உட்படுத்தியுள்ளது.

2017இல் இலங்கை அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் 70% பங்குகளை 99 ஆண்டு குத்தகைக்கு சீன அரசு நிறுவனமான China Merchants Port Holdings நிறுவனத்துக்கு வழங்கியது. இது சீனாவின் ‘கடன் பொறி இராஜதந்திரத்தின்’ (Debt-Trap Diplomacy) உதாரணமாகப் பார்க்கப்படுகிறது. இதனால் இலங்கை முக்கிய உட்கட்டமைப்பு சொத்துகளின் கட்டுப்பாட்டை இழந்தது.

அடுத்ததாக கொழும்பு துறைமுக நகரம். இந்த பில்லியன் டொலர் திட்டமும் சீனாவின் முதலீட்டில் உருவாக்கப்பட்டு வருகிறது. இது இலங்கையின் பொருளாதார மையமான கொழும்பில் சீனாவின் செல்வாக்கை மேலும் வலுப்படுத்துகிறது. 2022 பொருளாதார நெருக்கடியின் போது, இலங்கை சீனாவிடமிருந்து நிதியுதவி பெற்றது. ஆனால், இது இலங்கையின் சுதந்திரமான முடிவெடுக்கும் திறனை கட்டுப்படுத்தியுள்ளதாக விமர்சிக்கப்படுகிறது.

சீனாவின் ‘பட்டுப்பாதை திட்டம்’ (Belt and Road Initiative - BRI) இலங்கையில் பல முக்கிய திட்டங்களை உள்ளடக்கியது.

தாமரைக் கோபுரம்: கொழும்பில் அமைந்த இந்தக் கோபுரம் சீன நிதியுதவியுடன் கட்டப்பட்டது. இது சீனாவின் மற்றொரு முக்கிய முதலீடு. இது இலங்கையின் போக்குவரத்து உட்கட்டமைப்பை மேம்படுத்தியுள்ளது.

காலி துறைமுக அபிவிருத்தித் திட்டத்திலும் சீனா ஆர்வம் காட்டியுள்ளது. இது இலங்கையின் தெற்கு கடற்கரையில் அதன் செல்வாக்கை விரிவாக்க உதவுகிறது.

சீனாவின் இராணுவ மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் இலங்கையில் பிராந்திய பதற்றத்தை உருவாக்கியுள்ளன. சீனா இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்ள முயற்சிக்கிறது. குறிப்பாக, திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் ஒப்பந்தம் நீடிக்கப்பட்டுள்ள நிலையில், இது இந்து-பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் மூலோபாய ஆதிக்கத்தை வலுப்படுத்துகிறது.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் இந்து - பசுபிக் பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு அச்சுறுத்தலாகவுள்ளது. சீனா-இந்தியா போட்டி: இலங்கையை ஒரு மூலோபாயத் தளமாக சீனா பயன்படுத்துவது இந்தியாவின் செல்வாக்கைச் சவாலுக்கு உட்படுத்துகிறது. இதனால், இலங்கை, இந்தியா மற்றும் சீனாவுக்கிடையிலான புவிசார் அரசியல் மோதலில் சிக்கியுள்ளது.

இலங்கையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் மூலம் சீனா தனது செல்வாக்கை மேலும் வலுப்படுத்த முயல்கிறது. இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் சீனாவின் நிதியுதவி இலங்கையை சீனாவின் செல்வாக்கிலிருந்து விடுபடுவதைக் கடினமாக்குகிறது. இலங்கையில் சீனாவின் இராணுவ மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் இந்தியாவுடனான உறவுகளை மேலும் சிக்கலாக்கலாம். இது இந்து-பசுபிக் பிராந்தியத்தில் புவிசார் அரசியல் மோதல்களைத் தீவிரப்படுத்தும். இது இலங்கையின் இறையாண்மை மற்றும் பிராந்திய பாதுகாப்புக்கு சவாலாகவுள்ளது .

பிராந்திய அமைதியைத் தருவது இந்தியா - பாகிஸ்தான் போர்நிறுத்தம் மட்டுமல்ல. சீனாவின் ஆதிக்கம் குறைவதும் அமைதியைத் தரும். இந்தியா - பாகிஸ்தானுக்கு உபதேசிக்க முன்னர் இலங்கை தன்னை சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும். ஊருக்கு உபதேசம் செய்யுமுன் தனக்குத்தானே உபதேசம் செய்துகொள்வது நல்லது.

# உள்ளூராட்சித் தேர்தலும் சிறுபான்மை சமூகமும்



ஹஸ்பர் ஏ. ஹலீம்

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மூலமாக ஒரு செய்தியை ஏதோ ஒரு வகையில் தற்போதைய ஆளும் தேசிய மக்கள் அரசாங்கத்துக்கு வடகிழக்கைச் சேர்ந்த மக்கள் சொல்லியிருக்கின்றனர். கடந்த காலங்களில் எதிர்க்கட்சியில் இருந்தபோது அநுர தரப்பினர் பல வாக்குறுதிகளை முன்வைத்து தேசிய அரசியலில் இடம்பிடித்தனர். தற்போது ஆட்சிக்கு வந்து ஏழு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் தேர்தல் காலங்களில் வழங்கப்பட்ட பல வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இதனை நன்குணர்ந்த மக்கள் அதற்கான பதிலடிகளைக் கொடுத்துள்ளனர்.

கிழக்கில் முஸ்லிம்கள் பரவலாக வாழும் எந்தவொரு வட்டாரங்களிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறவில்லை. அதேபோன்று வடக்கிலும் தமிழ்த் தேசியம் நிலை நிறுத்தப்பட்டுள்ளதை உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தெளிவூட்டியுள்ளன.

இவ்வாறான நிலை குறித்து திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவிக்கையில்,

“ நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இந்த நாட்டினுடைய சிறுபான்மைச் சமூகம் அல்லது சிறுபான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தலைவர்கள், நாட்டு மக்களின் அங்கீகாரம் பெற்ற தேசிய மக்கள் சக்தி முதலான கட்சிகளின் தலைவர்களுக்கும் பல உண்மைகளை வழங்கியிருக்கிறது. ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் சில்வா, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் அமைச்சர்கள் இந்தத் தேர்தலை மாபெரும் வெற்றியாக வெளிக்கொணர்கின்றபோதும் கூட நடந்து முடிந்த பொதுத் தேர்தலை விட 20 இலட்சத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெற்றுள்ளமையானது தங்களுடைய நிலைப்பாட்டிலிருந்து மாறவேண்டுமென்பதையே மக்கள் வெளிக்காட்டியுள்ளனர்.

அதேபோன்று, வடபுலம் தமிழ் மக்கள் கைகளிலே இல்லை. அது தேசிய மக்கள் சக்தியிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வோமென்று சொல்வதை விட அந்தப் பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சிக்கும் விக்னேஸ்வரன் தலைமையிலான ஜனநாயக முன்னணிக்கும் கஜேந்திரகுமாருடைய இலங்கைத் தமிழ்க் காங்கிரஸுக்கும் கிழக்கு மாகாணத்தின் எஸ். சந்திரகாந்தனுக்கு 37 க்கு மேற்பட்ட உறுப்பினர்களையும் ஒரு சபையையும் ஈ.பி.டி.பிக்கு தீவுப் பகுதியிலும் அங்கீகாரம் கிடைத்திருக்கின்ற நேரத்தில் தமிழ்த் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமது பலத்தை நிரூபித்துக் காட்டலாம். இதற்காக வடக்கு, கிழக்கு, மலையகத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வண்டும்.

முஸ்லிம் கட்சித் தலைவர்களான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா ஆகியோர் ஒன்றிணைந்து மாபெரும் சக்தியாக மாறினால் சிறுபான்மையினரின் பலத்தை நிரூபித்துக் காட்டலாம்.



இந்நிலையில் தலைவர்கள் மாறவேண்டும், அதே போல ஒன்றுபடவேண்டுமென்ற செய்தியைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் இரண்டாம் திகதிக்கு முன்னர் இவர்கள் யார் என்பதை மக்களுக்குச் சொல்ல வேண்டும் என்பதே எனது கருத்தாகும்’’- என்றார்.

அரசாங்கம் கடந்த தேர்தலை விட இம்முறை குறிப்பாக, வடகிழக்கு, மலையகம் போன்ற பகுதிகளில் சிறுபான்மை மக்களின் ஆதரவை இழந்துள்ளது . நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் பல பகுதிகளில் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது. அதாவது ஏனைய கட்சிகளின் கூட்டுச் சேர்வு மூலமே சபைகளை ஆளும் துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனடிப்படையில் தேசிய மட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 4,503,930 வாக்குகளையும் 3,927 உறுப்பினர்களையும் பெற்றுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி 2,258,480 வாக்குகளையும் 1,767 உறுப்பினர்களையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 9,54,517 வாக்குகளையும் 742 உறுப்பினர்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 4,88,406 வாக்குகளையும் 381 உறுப்பினர்களையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி 3,07,657 வாக்குகளையும் 377 உறுப்பினர்களையும் பொதுஜன முன்னணி 3,87,098 வாக்குகளையும் 300 உறுப்பினர்களையும் சர்வசன அதிகாரம் 2,94,681 வாக்குகளையும் 226 உறுப்பினர்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 1,39,858 வாக்குகளையும் 116 உறுப்பினர்களையும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 89,177 வாக்குகளையும் 106 உறுப்பினர்களையும் பெற்றுள்ளன. குறித்த வாக்கு வீதங்களை வைத்து நோக்கும்போது தமிழ் மக்கள் ஆளுந் தரப்புக்கு சிறந்த பாடம் புகட்டியுள்ளனர்.

சிறுபான்மைக் கட்சிகளைச் சேர்ந்த தலைமைத்துவங்கள் ஒவ்வொரு சபைகளிலும் ஆட்சியமைக்க வேண்டிய தேவையுள்ளது. இதனால் தவிசாளர்கள் தெரிவின்போது ஒற்றுமையாக செயற்பட்டால் தங்கள் பலத்தை அடைந்துகொள்ளலாம்.

குறிப்பாக, வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்ட ஆசனங்களின் எண்ணிக்கை, தமிழ்த் தேசியத்தின் வீழ்ச்சியாக மதிப்பிடப்பட்டது. அதனைச் சீர்செய்வதற்கான களமாகவே உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரம் அமைந்திருந்தது. தமிழ்த் தேசிய முலாம் பூசப்பட்ட கட்சிகள், தமிழ்த் தேசிய ஆர்வலர்கள் மற்றும் கருத்தியலாளர்கள் மத்தியில் பொது எதிரியாக ஜே.வி.பி. பரிணாமமாகிய தேசிய மக்கள் சக்தி தோற்கடிக்கப்பட வேண்டுமெனும் பிரசாரமே முதன்மையாகக் காணப்பட்டது. தேர்தல் முடிவுகளிலும் அத்தகைய நிலைப்பாட்டையே அவதானிக்கக் கூடியதாகவும் உள்ளது.

அவ்வாறே தென்னிலங்கையில் தேசிய மக்கள் சக்தி கணிசமான சபைகளில் முன்னிலையைப் பெற்றுள்ள போதிலும் தனித்து ஆட்சியமைக்கக்கூடிய அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியாத நிலைமைகளே காணப்படுகின்றன.

2024 நவம்பரில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் 61.56 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்த தேசிய மக்கள் சக்தி, நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் 43.37 சதவீதமான வாக்குகளையே பெற்றுள்ளது. அவ்வாறே பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி 17.66 வீதம் மற்றும் பொதுஜன பெரமுன 3.14 வீத என வாக்குகளைப் பெற்றிருந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி 21.77வீதமும் பொதுஜன பெரமுன 9.20வீதமும் பெற்று உயர்வடைந்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றத் தவறியதாலேயே தேசிய மக்கள் சக்தி பெரும் வீழ்ச்சியைக் சந்தித்துள்ளது.

தேர்தல் முடிவுகள் தொடர்பில் திருகோணமலையைச் சேர்ந்த ஆர்.ரவி இவ்வாறு தெரிவிக்கிறார், அதாவது ‘‘மக்களை ஏமாற்றி இனவாத அரசியல் சாயம் பூசி மேற்கொண்ட தேர்தல் பிரசாரம் வெற்றியளிக்கவில்லை. இதனால் அரசாங்கம் குறைந்த வாக்குகளைப் பெற்றுள்ளதுடன் சபைகளில் பெரும்பான்மையுடனான ஆட்சியைத் தக்கவைக்க முடியாத நிலையையும் எட்டியுள்ளது’’- என்றார்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப்பகுதிகளில் சபைகளை வெற்றிகொள்ளக்கூடிய வாய்ப்பை இழந்துள்ளது. திருகோணமலை மாநகர சபை, பட்டினமும் சூழலும் பிரதேச சபை, கிண்ணியா நகர சபை, கிண்ணியா பிரதேச சபை உள்ளிட்ட சபைகளில் கூட தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியமைக்க முடியாது நிலைமை உருவாகியுள்ளது. ஆனாலும், கோமரங்கடவெல பிரதேச சபை பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த சபை என்பதால் அங்கு அவர்களுக்கான சாதக நிலையுள்ளது. இது தவிர, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் அதிக வட்டாரங்களில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெற்றி பெற்றுள்ளனர்.

எனினும், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபைகளில் பெரும்பான்மையைக் கூடப் பெறமுடியாத நிலையும் கொழும்பு மாநகர சபையில் அறுதிப்பெரும்பான்மையை உறுதி செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளமையானது தேசிய மக்கள் சக்தியின் சரிவையே எடுத்துக்காட்டுகிறது.

**மக்களின் நம்பிக்கையின்மை**

பொதுவாக தேசிய மக்கள் சக்தி, பொருளாதார நெருக்கடி, ஊழல், வறுமை மற்றும் அரசியல் மாற்றம் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதாக வாக்குறுதிகளை வழங்கிய போதிலும் அவ்வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில், மக்களது தேவைகளைத் தீர்க்கும் திறன் கொண்ட எதிர்பார்ப்பில் உள்ள கட்சிகளுக்கு உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் வாக்களித்தனர். இதனால் தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கியில் வீழ்ச்சியேற்பட்டது.

**பிரதேச அடிப்படையிலான பிரச்சினைகள்**

உள்ளூராட்சித் தேர்தல்கள் பொதுவாக பிரதேச அடிப்படையிலான பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. இந்நிலையில், தேசிய மக்கள் சக்தி பிரதேச ரீதியில் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதில் சவால்களை எதிர்கொண்டது.

**பிரதிநிதித்துவத்தின் குறைவு**

உள்ளூராட்சி அமைப்புகளில் மக்கள் தங்களது பிரச்சினைகளை நேரடியாகப் பிரதிநிதிகளிடம் கொண்டு செல்ல விரும்புகின்றனர். இந்த நிலையில், தேசிய மக்கள் சக்தி கட்சியின் பிரதேச ரீதியான பிரதிநிதிகள் குறைவாக இருந்ததால், மக்கள் அவர்களுக்கு வாக்களிக்கவில்லை.


**எதிர்க்கட்சிகளின் வலுவான பிரசாரங்கள்**

உள்ளூராட்சித் தேர்தல்களில் பல்வேறு கட்சிகள் தங்களது பிரசாரங்களை வலுப்படுத்தியிருந்தன.

இவ்வாறான காரணங்களால் தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சித் தேர்தலில் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. இது கட்சியின் எதிர்காலத் திட்டங்களை மீண்டும் மதிப்பாய்வு செய்யவும் மக்களின் தேவைகளுக்கேற்ப செயற்படவும் அவசியம் என்பதை உணர்த்தி நிற்கிறது.

## நக்கல் நமசிவாயம்

***சாதாரண உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் இலட்சக்கணக்கில் விலை பேசப்படுறாங்களாம்..அப்ப பாருங்களேன்.....***



## இன்றைய நாளில்...

**1648 – டில்லியில் செங்கோட்டை கட்டி முடிக்கப்பட்டது.**
**1656 – ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிடம் இருந்து கொழும்பைக் கைப்பற்றினர்.**
**1765 – யாழ்ப்பாணத்தின் டச்சுத் தளபதியாக அந்தனி மூயார்ட் நியமிக்கப்பட்டார்.**
**1967 – ஸாகிர் உசேன் இந்தியாவின் முதலாவது முஸ்லிம் குடியரசுத் தலைவர் ஆனார்.**
**1997 – இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளுக்கெதிராக ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது.**
**2006 – அல்லைப்பிட்டிப் படுகொலைகள்: யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டியில் 13 பொதுமக்களை இலங்கைக் கடற்படையினர் படுகொலை செய்தனர்.**
**2006 – தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி 5ஆவது தடவையாக தமிழக முதல்வர் பதவியை ஏற்றார்.**
**2007 – திருகோணமலை மொறவெவப் பகுதியில் பொங்கு தமிழ் உட்பட பல நிகழ்வுகளில் முன்னின்று கலந்துகொண்ட வணக்கத்துக்குரிய நந்தரத்ன தேரர் இனம் தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்டார்.**

## தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 30ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்** தேவையற்ற பயணங்களால் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி வரும். உங்கள் சொத்துகளின் மீது கவனம் செலுத்துங்கள்.

**ரிஷபம்** ஆலோசிக்காது முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். கோபத்தால் பொறுமை இழந்து விடாதீர்கள்.

**மிதுனம்** முக மலர்ச்சியுடன் செயற்படு வீர்கள். நினைத்த காரியத்தில் வெற்றி, விண்ணப்பித்திருந்த கடன் இன்று கிடைக்கும்.

**கடகம்** அதிர்ஷ்டத்தை சோதித்து பணத்தை இழப்பீர்கள். மனதை சமாதானப்படுத்திக் கொள்ளுங் கள்.

**சிம்மம்** வீடு, வாகனத்தால் வீண் செலவுகள் அல்லது தொல்லைகள் ஏற்படும். தாயின் ஆசியினை பெற்றுக் கொள்ளுங்கள்.

**கன்னி** நீண்ட நாள் முயற்சி வெற்றியைக் கொடுக்கும். நண்பர் உறவினர் தொடர்பால் நன்மைகள் உண்டு.

**துலாம்** வாய் வார்த்தைகளை நிதான மாகப் பிரயோகியுங்கள். கடன் கொடுப்பதும் வாங்குவதும் சிக்கலைத் தரும்.

**விருச்சிகம்** அலைச்சலும் செலவுகளும் நிறைந்த நாள். மனதை கட்டுப் பாட்டுக்குள் வைத்துக்கொள்ளவும்.

**தனுசு** நினைத்த காரியத்தை சிரமமின்றி முடிப்பீர்கள். உடல் பலம், மன நலம் சிறப்பாக இருக்கும்.

**மகரம்** குடும்ப உறவில் சிக்கல் ஏற்படலாம். தேவையற்ற பயணங் களால் வெறுப்படைவீர்கள்.

**கும்பம்** தொழில் ரீதியில் பாராட்டுகள் கிடைக்கும். விரும்பிய பெண் உறவால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**மீனம்** புதிய தொழில் வாய்ப்புகள் வந்தமையும். திட்டமிட்ட காரியங் களில் சாதனை செய்வீர்கள்.

| | |
|---|---|
| **திதி:** | பிரதமை பி.இ.12.36 வரை பின் துவிதியை |
| **நட்சத்திரம்:** | விசாகம் மு.ப.9.09 வரை பின் அனுஷம் |
| **பிறை :** | தேய்பிறை |
| **யோகம்:** | சித்த யோகம் மு.ப.9.09 வரை பின் மரண யோகம் |
| **வார சூலை:** | வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்:** | காலை- 7.54 – 8.54 மணி வரை பகல் - 11.54 – 12.54 மணிவரை மாலை- 3.54 – 5.54 மணிவரை |
| **ராகு காலம்:** | 2.54 – 4.24 மணிவரை |
| **எமகண்டம்:** | 8.54 – 10.24 மணிவரை |
| **குளிகை :** | 11.54 – 1.24 மணிவரை |

**சந்திராஷ்டமம்:** மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்.

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முற்பகல் 9.09 மணிவரை**

பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி

**இன்று முற்பகல் 9.09 மணிக்கு மேல்**

அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், போட்டி தேர்வுகளில் வெற்றி, தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு தலதா மாளிகைக்கு செல்லும் ஆயிரக்கணக்கான பக்தர்கள்







(எம்.ஏ.அமீனுல்லா)

வெசாக் பௌர்ணமி போயா தினத்தை முன்னிட்டு நேற்று (12) கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் சென்று வழிபாட்டில் ஈடுபட்டனர்.

அவர்களுக்கு அன்னதானமும் வழங்கப் பட்டது.

தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேலாவின் அறிவுறுத்தலின்பேரில் ஸ்ரீ தலதா மாளிகையால் ஏற்பாடுசெய்யப்பட்ட அன்னதான விநியோகம் நேற்று (12) காலை 7.00 மணிமுதல் இரவு 8.30 மணிவரை தலதா மாளிகை வளாகத்தில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க யானைத் தெருவில் நடைபெற்றது.

கண்டியில் உள்ள கதிர்காம தேவாலயத்தினால் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் ஏற்பாடு செய்யப்படும் அன்னதான விநியோகம் நேற்று (12) கதிர்காம தேவாலயத்துக்கு முன்பாக பஸ்நாயக்க நிலமே தமிந்த பண்டார உதுராவன தலைமையில் நடைபெற்றது.

கண்டி விஷ்ணு தேவாலய பாற்சோறு ம் வழங்கப்பட்டது. அது நேற்று பஸ்நாயக்க நிலமே மஹேன் ரத்வத்தேவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் புத்தரின் நினைவாக கண்டி நகர எல்லைக்குள்ளும் வெளியேயும் அன்னதான வழங்கல் மற்றும் மத நிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் பேசாலை கடற்கரை பிரதேசத்தில் ரூ.87 மில். பெறுமதியான கேரள கஞ்சா மீட்பு





(ஜோசப் நயன்)

மன்னார், பேசாலை கடற்கரை பிரதேசத்தில் நேற்று முன்தினம் (11) இலங்கை கடற்படை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின்போது, 87 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

மன்னார், பேசாலை கடற்கரை பிரதேசத்தில் இலங்கை கடற்படை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின்போது 218 கிலோ, 800 கிராம் கேரள கஞ்சா பொதிகளுடன் ஆளில்லாத நிலையில், கண்ணாடி இழைப் படகு ஒன்று கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

அதன்படி, வடமத்திய கடற்படை கட்டளையின், இலங்கை கடற்படை கப்பல் கஜபா நிறுவனத்தினால் பேசாலை கடற்கரை பிரதேசத்தில் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது, அந்த கடல் பகுதியில் சந்தேகத்துக்கிடமான படகு ஒன்றை அவதானித்து சோதனை செய்யப்பட்டது.

அங்கு, படகில், எட்டு பொதிகளில் பொதி செய்யப்பட்டிருந்த 218 கிலோ 800 கிராம் கேரள கஞ்சாவுடன் படகையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

கடற்படையின் நடவடிக்கைகளால் படகை கரைக்கு கொண்டு வர முடியாததால், கடத்தல் காரர்கள் பேசாலை கடற்கரையில் படகுடன் கேரள கஞ்சாவை கைவிட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த மதிப்பு 87 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

மேலும், கேரள கஞ்சா பொதிகள் மற்றும் படகு ஆகியன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படவுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

# வவுனியாவில் இளங்கோ அடிகளின் நினைவு தினம் அனுஷ்டிப்பு





தமிழில் தோன்றிய முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகள் சித்திரை பௌர்ணமி நாளில் நினைவுகூரப்படுகின்றார்.

அந்தவகையில் வவுனியா சின்னப்புதுக்குளம், சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள இளங்கோ அடிகளின் திருவுருவச் சிலைக்கருகிலும் குறித்த நிகழ்வானது நேற்று (12) இடம்பெற்றது.

இதன்போது இளங்கோ அடிகளின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், சிறப்புரைகளும் இடம்பெற்றிருந்தன.

வவுனியா மாநகரசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நகரசபை உத்தியோகத்தர்கள், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், சமூக ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மோட்டார் சைக்கிள் காட்சியகத்தில் தீ விபத்து

## 20 வாகனங்கள் தீக்கிரை

கடுகண்ணாவை பொலிஸ் பிரிவின் அம்பிலிமிகம பகுதியில் உள்ள மோட்டார் சைக்கிள் காட்சியகம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 20 மோட்டார் சைக்கிள்கள் எரிந்து நாசமாகியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேச மக்களும் கடுகண்ணாவை பொலிஸாரும் தீயை அணைக்க முயற்சித்த போதிலும் குறிப்பிடத்தக்க சேதம் ஏற்பட்டுள்ளது.

கடுகண்ணாவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமை ஆய்வாளர் சேனநாயக்க தலைமையிலான குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

# தங்கம் தருவதாகக் கூறி கோடிக்கணக்கில் பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம்

## சந்தேகநபர்கள் நால்வர் கைது

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி - வெலம்பொட பகுதியில் தொழிலதிபர் ஒருவரிடம் குறைந்த விலையில் 15 கிலோ தங்கம் தருவதாக உறுதியளித்து அவரிடமிருந்த 22 கோடி ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகக் கூறப்படும் கும்பலைச் சேர்ந்த நான்கு பேரை பொலிஸார் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர்.


இக்கொள்ளைச் சம்பவத்தில் எட்டு பேர் ஈடுபட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

சந்தேகநபர்களில் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்ட மூன்று வேட்பாளர்களும் அடங்குவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்தக் கொள்ளை வெளிநாட்டில் இருந்து திட்டமிடப்பட்டு, குறைந்த விலையில் 15 கிலோ தங்கம் பெற முடிந்தது எனத் தெரிவித்து, மேலும் இரண்டு பேர் அந்த தொழிலதிபரை சந்திக்க வந்து அவருக்கு ஒரு தங்க பிஸ்கட்டைக் கொடுத்துள்ளனர். அப்பொழுது தங்க பிஸ்கட்டைப் பரிசோதித்ததில், அது 24 கரட் தங்க பிஸ்கட் என்பது உறுதிசெய்யப்பட்டது.

இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியவர்கள் உண்மையான தங்கத்தை வழங்குவார்கள் என்று நம்பிய தொழிலதிபர், 15 கிலோ தங்கத்தைப் ரூ.22 கோடிக்கு வாங்க ஒப்புக்கொண்டுள்ளார்.



அதன்படி, குறித்த வியாபாரத்தை நிறைவுசெய்ய மூன்று பேர் கடந்த 08ஆம் திகதி வெலம்பொடவில் உள்ள தொழிலதிபரின் வீட்டுக்குச் சென்றுள்ளனர். அந்த நேரத்தில், குறித்த தொழிலதிபர் தன்னிடமிருந்த பிராடோ ஜீப் மற்றும் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளின் தங்க நகைகளை பொற்கொல்லர் ஒருவரிடம் விற்பனை செய்து 10 கோடி ரூபா பெற்று மொத்த தொகையான 22 கோடி ரூபாவை ஒப்படைத்துள்ளார்.

அதன்பிறகு கண்டி பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினர், வெலம்பொட பொலிஸாருடன் இணைந்து, இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தினர். குறித்த விசாரணையையடுத்து, கொள்ளைச் சம்பவத்தை செய்த நான்கு நபர்களில் ஒருவர் நேற்று முன்தினம் (11) எம்பிலிப்பிட்டிய பகுதியில் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேக நபர்கள் வந்த வேன் சி.சி.டி.வி. கெமராவில் பதிவாகியுள்ளது எனவும் குறித்த வாகனத்தில் போலி இலக்கத் தகடுகளை இணைத்து கொள்ளையடிக்க வந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் மூன்று சந்தேக நபர்களைக் கைதுசெய்வதற்காக, மத்திய மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் சுதத் மாசிங்கவின் அறிவுறுத்தலின்பேரில், கண்டி பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அனுருத்த பண்டாரநாயக்கவின் வழிகாட்டுதலின் கீழ், பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி, தலைமைப் பொலிஸ் பரிசோதகர் திலக் சமரநாயக்க உள்ளிட்ட குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

# அடுத்தகட்ட செயற்பாடுகள் குறித்து தமிழ் மக்கள் கூட்டணி கலந்துரையாடல்



(சி.திவியா)

பிரதேச சபை உறுப்பினர் தெரிவு மற்றும் கட்சியின் அடுத்தகட்ட அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் கலந்துரையாடல் வவுனியாவில் இடம்பெற்றது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தமிழழகன் தலைமையில் வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதியில் குறித்த கலந்துரையாடல் நேற்று (12) மாலை இடம்பெற்றது.

இதன்போது கட்சிக்கு கிடைத்த போனஸ் ஆசனத்தில் பிரதேச சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பிலும் தவிசாளர் தெரிவில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டதுடன், தேர்தலுக்கு பின் கட்சியை வவுனியா மாவட்டத்தில் விரிவாக்கம் செய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதில் கட்சியில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# கல்-எலியவில் பட்டமளிப்பு விழா

கல்-எளிய முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரியின் வருடாந்த பட்டமளிப்பு விழா நாளை 14ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

1959 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட கல்-எலிய முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி பெண்களுக்கான மார்க்கக் கல்வியுடனான அறிவு மற்றும் சமூக மேம்பாட்டின் கலங்கரை விளக்காக விளங்கி வருகிறது.

இந்நிலையில், நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவில் கடந்த 2016, 2017, 2018, 2019, 2020, 2021, 2022 மற்றும் 2023 வருடங்களில் கல்வி கற்று வெளியேறிய மாணவிகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவ்விழாவில் சமூகத் தலைவர்கள், கல்வி அதிகாரிகள், கல்லூரியின் வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கும் கல்லூரி மாணவிகள், நலன் விரும்பிகள், மாணவியர்களின் கல்வி வளர்ச்சிக்கு அயராது உழைத்த ஆசிரியர்கள் மற்றும் சக ஊழியர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# யாழ். சிறையிலிருந்து 20 கைதிகள் விடுதலை

(பு.கஜிந்தன்)

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 20 கைதிகள் நேற்று (12) விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நாடு பூராகவும் 388 சிறைக் கைதிகள் நேற்று (12) விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களுக்காக குறுகியகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

அதன்படி யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைத்திருந்த 20 கைதிகள் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைதிகளை யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் டி.ஐ.ஜெயவர்த்தன உள்ளிட்ட சிறைச்சாலை அதிகாரிகள் கைலாகு கொடுத்து வழியனுப்பி வைத்தனர்.

# நானும் உங்களைப்போல இடம்பெயர்ந்து சென்றவன் தான்; இடப்பெயர்வின் வலி எனக்கும் நன்றாகவே தெரியும்

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன்

(பு.கஜிந்தன்)

''நாங்கள் இந்தப் பகுதிகளை விட்டு இடம்பெயராமல் இருந்திருந்தால் இன்று நாம் எங்கேயோ முன்னேறிச் சென்றிருப்போம். அதைக் கற்பனை செய்து பார்க்கவே மகிழ்ச்சியாக இருக்கின்றது.

இடப்பெயர்வின் வலி உங்களைப்போல எனக்கும் நன்றாகவே தெரியும். நானும் உங்களைப்போன்று இடம்பெயர்ந்து சென்ற ஒருவன்தான்''- என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மயிலிட்டி, திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றிய சனசமூக நிலையத்துடன் இணைந்த கல்வி நிலைய கட்டிடத் திறப்பு விழா மயிலிட்டி சனசமூக நிலைய வீதியில் நேற்று (12) இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்ற ஆளுநர், கட்டிடத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்ததுடன், பெயர்ப்பலகையையும் திரைநீக்கம் செய்து வைத்தார்.

ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது,

''தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் உதவி அரசாங்க அதிபராக நான் கடமையாற்றியிருக்கின்றேன். 1996ஆம் ஆண்டு நாம் இங்கு வந்தபோது இடம்பெயராமல் தங்கியிருந்த தையிட்டி மக்கள் சிலரை இராணுவத்தினருடன் வந்து நான் பார்வையிட்டேன். அப்போது மயிலிட்டி உள்ளிட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வீடுகள் அனைத்தும் நல்ல நிலையில்





இருந்ததை நான் நேரடியாகக் கண்டிருந்தேன். 2015ஆம் ஆண்டு மாவட்டச் செயலராக யாழ். மாவட்டத்துக்கு நான் வந்த பின்னர் மயிலிட்டிப் பகுதியை வந்து பார்வையிட்டபோது அதிர்ச்சியாகவும் கவலையாகவும் இருந்தது. நல்ல நிலையிலிருந்த வீடுகள் பலவும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டிருந்தன.

2015ஆம் ஆண்டு மாவட்டச் செயலராக நான் வரும்போது மாவிட்டபுரம் சந்தி வரையிலேயே முழுமையாக விடுவிக்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் படிப்படியாக இங்கே மீள்குடியேற்றம் நடைபெற்றது. அன்றைய காலத்தில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, தர்சன ஹெட்டியாரச்சி ஆகியோர் மீள்குடியமர்வு செயற்பாட்டுக்கு முழுமையாக ஒத்துழைத்திருந்தார்கள். அவர்கள் இன்னும் சில காலம் இருந்திருந்தால் மேலும் பல காணிகளை எம்மால் விடுவித்திருக்க முடியும்.

காணிகளை விடுவிக்கும்போது மகேஸ் சேனநாயக்க, நீங்கள் அடுத்த வாரமும் எங்களிடம் வருவீர்கள். அடுத்த காணிகளை விடுவிக்கக் கோருவீர்கள் என்று நகைச்சுவையாகச் சொல்வார். அப்படித்தான் இந்தக் காணி விடுவிப்புகளைச் செய்தோம். மாவட்டச் செயலராக இருந்தபோது என்னுடன் மிகச் சிறந்த அணி இருந்தது. அப்போது யாழ். மாவட்டச் செயலகத்தில் மேலதிக மாவட்டச் செயலர் - காணி – பணியாற்றிய முரளிதரன் மற்றும் இந்தப் பகுதி பிரதேச செயலர்களாக இருந்த சிறிமோகன், சிவசிறி ஆகியோரும் என்னுடன்



இராணுவத்தினருடன் கலந்துரையாட வருவார்கள். அடிக்கடி இராணுவத்தினரைச் சந்தித்து காணி விடுவிப்புக்கான கோரிக்கையை முன்வைத்தே இவற்றைச் சாத்தியமாக்கியிருந்தோம்.

தற்போது இங்கு வரும்போது இந்தப் பகுதிகளைப் பார்வையிடும்போது மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது. வீடுகளை அமைத்து கட்டிடங்களை அமைத்து முன்னேறியிருக்கின் றீர்கள். உங்கள் கிராமத்தை வளர்ச்சியடையச் செய்திருக்கின்றீர்கள் என்றார்.

நிகழ்வின் தலைவர் தனது உரையில் பல கோரிக்கைகளை முன்வைத்திருந்தார். நான் அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே இந்தப் பகுதிக்கான ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவுடன் பேசிக்கொண்டிருந்தேன். விரைவில் விசேட கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தி உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றித்தருவோம்''- என்றார்.





தமிழ் ஹைக்கூ நான்காவது உலக மாநாடு-2025, கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்று முன்தினம் (11) நடைபெற்றது. இதன்போது வெளியிடப்பட்ட சு.முரளிதரனின் "கூடைக்குள் தேசம்" ஹைக்கூ தொகுப்பின் இரண்டாம் பதிப்பின் முதல் பிரதியை இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமர் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், சமூகஜோதி ரபீக் ,ஊடகவியலாளர் பொன்னுத்துரை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## உலக வர்த்தக தமிழர்கள் மாநாடு - 2025; தமிழர் ஒருமித்து உலகை வெல்வோம்



2025ஆம் ஆண்டுக்கான உலகத் தமிழர்களின் வர்த்தக மாநாடு இம்முறை மலேசியாவில் இடம்பெறவுள்ளதாகவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள அனைவருக்கும் அழைப்பு விடுப்பதாகவும் உலக வர்த்தக தமிழ்ச் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி ஸ்டார் ஆனந்ராம் தெரிவித்தார்.


உலகத்தில் முதன் முதலில் செல்வம் பெருகுவதற்காக பல நாடுகளுக்குப் பயணித்து பல நாடுகளில் மிக முக்கியமான வியாபார வெற்றியாளர்களாக மாறியவர்கள் தமிழர்கள். உலகத் தமிழர்கள் முன்னேற்றம் பல்வேறு துறைகளில் நிகழ்ந்து வருகிறது.

இதன்படி வரும் ஜூலை மாதம் மலேசியா கோலாலம்பூரில் உலகத் தமிழர்களின் வர்த்தக மாநாடு இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டின் மூலம் 15க்கும் மேற்பட்ட நாடுகளில் இருக்கும் வியாபார வெற்றித் தமிழர்களை ஒன்றிணைத்து உலக அளவில் தமிழர்களின் வியாபார முன்னேற்றத்துக்கான பல்வேறு விதமான கலந்துரையாடல்களையும் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த மாநாட்டின் மூலமாக வரும் காலத்தில் எந்த மாதிரியான வியாபாரத்தில் வெற்றிபெற முடியும். அதற்கு முதலீடுகளை எவ்வாறு உருவாக்க வேண்டும், அதற்குரிய திட்டங்களை எவ்வாறு தீட்ட வேண்டும், அதற்குரிய செயற்பாடுகளைச் செய்ய என்ன மாதிரியான விஷயங்களைக் கற்றுக்கொண்டு செயற்பட வேண்டும் என்கின்ற விஷயங்கள் குறித்துக் கலந்துரையாட இருக்கின்றார்கள்.

தமிழ் முன்னேற வேண்டுமென்றால் தமிழர்கள் முன்னேற வேண்டும். தமிழர்கள் உலக அளவில் தமிழர்களுக்கான வியாபார வர்த்தக வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும். அதற்குரிய வாய்ப்புகளை அதிகரிக்கவே இந்த அற்புதமான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் (ஓய்வுபெற்ற)மேஜர் ஜெனரல் பஹீம் உல் அஸீஸ், கொழும்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் சென்றவாரம் அவரை சிநேகபூர்வமாகச் சந்தித்து உரையாடியுள்ளார். இதன்போது கட்சியின் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரும் உடனிருந்தார்.

## தமிழினப் படுகொலை வாரத்தின் ஆரம்ப நாளில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் வேலைத்திட்டம்

(கே.குமணன்)



'கஞ்சி பரிமாறுவோம் முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதை பகிர்வோம்' என்ற தொனிப்பொருளில் தமிழினப்படுகொலை வாரத்தின் மே 12 தொடக்கம் மே 18 வரை முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் வேலைத்திட்டம் முல்லைத்தீவு மாவட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதன் முதலாவது நாளில் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டிலும் பொது அமைப்புகளும் இணைந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடு நேற்று (12) முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

மே 12-மே 18 வரை தமிழினப்படுகொலை வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் 2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை யுத்தத்தில் பொருளாதாரத் தடை ஏற்படுத்தி பட்டினிச் சாவுக்குள்ளும் அரசு தள்ளிய வேளை தமிழ் மக்கள் உணவாக உட்கொண்ட கஞ்சியை இந்த வாரத்தில் அனைத்து மக்களுக்கும் வழங்கி முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் கதையைக் கடத்துவதோடு இனப்படுகொலைக்கு நீதி கோரும் அங்கமாக இந்தக் கஞ்சி பரிமாறும் வேலைத்திட்டம் வடக்கு, கிழக்கு மாகாணம் எங்கிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

புலனாய்வாளர்களின் கெடுபிடிகளுக்கு மத்தியில் கஞ்சி வழங்கும் செயற்பாட்டை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொது அமைப்பினர் இணைந்து முன்னெடுத்தனர்.

## கொட்டாஞ்சேனை மாணவியின் ஆத்ம சாந்திபூஜை வழிபாடு

கொட்டாஞ்சேனையில் உயிரிழந்த மாணவியின் ஆத்ம சாந்தி வேண்டி ஏற்பாடு செய்துள்ள பூஜை வழிபாடுகளில் கலந்துகொள் ளுமாறு ஈழத்தின் அனைத்து இந்து தலங்களின் பரிபாலன சபைக்களுக்கும் வத்தளை இந்து மா மன்றம் பணிவான கோரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி கொட்டாஞ்சேனையில் உயிரிழந்த மாணவி அம்ஷிக்காவின் ஆத்மா சாந்தியடைய இன்று (13) காலை 9 மணிக்கு 2 நிமிடங்கள் தொடர்ச்சியாக ஆலய காண்டாமணியை ஒலிக்குமாறும் வத்தளை இந்துமா மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

## கொத்மலை பஸ் விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கல்

### பிரதியமைச்சர் பிரதீப்



நுவரெலியா - கம்பளை பிரதான வீதி கொத்மலை கெரண்டி எல்ல பகுதியில் நேற்று முன்தினம் (11) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வீதியை விட்டு விலகி சுமார் 500அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி 22 பேர் வரை உயிரிழந்ததுடன் பலர் கடுமையாகக் காயமடைந்த செய்தி முழு நாட்டையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது என பெருந்தோட்டப் பிரதியமைச்சர் பிரதீப் சுந்தரலிங்கம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எத்தனையோ கனவுகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் மத்தியில் பயணித்த எமது உறவுகள் எதிர்பாராத விதமாக நடந்த விபத்தில் உயிர்நீத்துள்ளமை வேதனையளிக்கின்றது.

உயிரிழந்த எம் உறவுகளுக்கு பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் என்ற ரீதியில் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் உறவுகள் வெகுவிரைவில் குணமடைந்து ஆரோக்கியமாக வீடு திரும்ப நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

தற்போது இலங்கையில் தினமும் இவ்வாறான விபத்துகள் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. நாட்டில் தினமும் அதிகரித்து வரும் வீதி விபத்துகள் குறித்து எமது அரசாங்கம் மிகுந்த அவதானம் செலுத்தியுள்ளதென்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அன்பான வாகனச் சாரதிகளே, உயிர் என்பது விலைமதிப்பில்லாத ஒன்று. தங்களை நம்பி வாகனத்தில் ஏறும் ஒவ்வொருவருடைய உயிரையும் பாதுகாத்து சரியான இடத்தில் கொண்டுசேர்க்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். ஒவ்வொருவரும் தமது பணியைப் பொறுப்புணர்வோடு செயற்படுத்தி சட்டதிட்டங்களை மதித்து வாகனங்களைச் செலுத்துமாறு மிக அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் விபத்தில் உயிரிழந்தவர்களுக்காக ஜனாதிபதி நிதியத்தினூடாக உதவித் தொகையை வழங்க எமது அரசாங்கம் தீர்மானித்துள்ளது. குறித்த பணத்தால் இழந்த உயிர்களை மீட்க முடியாதென்றாலும் அத்தொகை குடும்பங்களுக்கு ஓர் ஆறுதலாக இருக்குமென நம்புகின்றேன்.

மேலும், காயமடைந்தவர்க ளுக்கு சிகிச்சையளிக்க சம்பந்தப்பட்ட அனைத்து வைத்தியசாலைகளும் தயார்படுத்தப்பட்டு, இது தொடர்பாகத் தேவையான அனைத்து மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவும் பாதுகாப்புப் படையினருக்கும் சுகாதாரப் பிரிவினர்களுக்கும் ஜனாதிபதியால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், போக்குவரத்து வசதிகளும் செய்துகொடுக்கப்பட் டுள்ளன.

மீண்டும் இந்தக் கோர விபத்தில் உயிரிழந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அனைத்து உறவுகளும் விரைவில் குணமடைந்து ஆரோக்கியமாக வீடு திரும்ப நாம் பிரார்த்திக்கின்றோம்.

## வவுனியா சிறையிலிருந்து ஏழு கைதிகள் விடுதலை




(சி.திவியா)

வெசாக் தினத்தை முன்னிட்டு பொது மன்னிப்பின் அடிப்படையில் கைதிகள் விடுதலை இடம்பெற்ற நிலையில், வவுனியா சிறைச்சாலையிலிருந்தும் 7 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

நாடளாவிய ரீதியில் 388 கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் வெசாக் தினத்தை முன்னிட்டு நேற்று (12) விடுதலை செய்யப்பட்டனர்.

இதனடிப்படையில் வவுனியா சிறைச்சாலையிலும் சிறு குற்றங்களோடு சம்பந்தப்பட்டவர்கள் ஏழு பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் பி.டபிள்யூ.எச்.மதுசங்க தலைமையில் கைதிகள் விடுவிப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் - கற்பிட்டி கடற்பரப்பில் 497 கிலோ பீடி இலைகள் மீட்பு



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம், கற்பிட்டி - முகத்துவாரம் கடற்பகுதியிலிருந்து ஒருதொகை பீடி இலைகள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

மேலும், இக்கடத்தலுடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தின் பேரில் நால்வர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வடமேற்கு கடற்படைக் கட்டளையின் விஜய நிறுவன கடற்படைச் சிறப்புத் தேடுதல் மற்றும் மரைன் படையினர் குறித்த கடற் பிரதேசத்தில் முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையின்போது அங்கு சந்தேகத்துக்கிடமான முறையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரண்டு டிங்கி இயந்திரப் படகுகளை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, அப்படகுகளிலிருந்து 14 உரப்பைகளில் அடைக்கப்பட்ட நிலையில் 497 கிலோ கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் 28 மற்றும் 41 வயதுகளையுடைய கற்பிட்டி, ஆனவாசலை மற்றும் மாம்புரி ஆகிய பிரதேசங்களில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் இரண்டு டிங்கி இயந்திரப் படகுகள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் மதுவரி விசேட பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

# இன அழிப்பு வார அனுஷ்டிப்பின்போது சிவிலுடையில் புகைப்படம், வீடியோ எடுத்த பொலிஸ் உத்தியோகத்தர்

## சிவில் சமூக செயற்பாட்டாளர்களினால் விரட்டியடிப்பு





(வீரமுனை செய்தியாளர்)

மட்டக்களப்பில் இன அழிப்புவார நிகழ்வு நேற்று ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அங்குவந்து மக்களை அச்சுறுத்தும் வகையில் சிவிலுடையில் மக்களை புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்த பொலிஸ் உத்தியோகத்தர் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரால் எச்சரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்து சென்றார்.

தமிழ் இன அழிப்பு வாரம் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உணர்வுபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. மட்டக்களப்பில் பெருமளவான மக்கள் கடத்தப்பட்டு படுகொலைசெய்யப்பட்ட சத்துருக்கொண்டான் நினைவுத்தூபி அருகில் தமிழ் இன அழிப்பு வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது அங்கு சிவில் உடையில் வந்த கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் என்று தெரிவிக்கப்படும் ஒருவர் நிகழ்வையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் புகைப்படம் எடுத்ததுடன் அங்கு நடைபெறும் நிகழ்வுகளையும் வந்தவர்களையும் வீடியோ எடுக்கும் நடவடிக்கையிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தார்.

இது தொடர்பில் அவதானித்த சமூக செயற்பாட்டாளர் செல்வகுமார், பொலிஸ் உத்தியோகத்தரை நோக்கி ''நாங்கள் அமைதியான முறையில் எங்கள் உறவுகளை நினைவுகூரும் நிகழ்வை நடத்திக்கொண்டிருக்கும்போது இங்குவந்து ஏன் இவ்வாறான பதிவுசெய்யும் நடவடிக்கைகளை எடுத்து மக்களை அச்சுறுத்துகின்றீர்கள்''- என்று கேள்வி எழுப்பியதுடன் அங்கிருந்த பாராளுமன்ற உறுப்பினர் சிறிநாத்தும் உங்களுக்கு இவ்வாறான செயற்பாடுகளை யார் செய்யச்சொல்லி அனுப்பியிருந்தார்கள் என்ற வகையான கேள்விகளைக் கேட்டபோது குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் அங்கிருந்து சென்றார்.

அரசாங்கம் இவ்வாறான நிகழ்வுகளை நடத்துவதற்கு தடைகளை விதிக்காத போதிலும், இவ்வாறான பொலிஸார் நிகழ்வுகளை குழப்பும் வகையில் செயற்படுவதாக அங்கிருந்தவர்கள் விசனம் தெரிவித்தனர்.

# பல சபைகளின் தலைமைப்பொறுப்பை ஏற்க தமிழ்க் கட்சிகளோடு பேசிவருகிறோம்

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் எம்.பி.

(கிண்ணியா செய்தியாளர்)




பல சபைகளில் தலைமைப் பொறுப்பை ஏற்க முதலில் தமிழ் பேசும் கட்சிகளுடன் கட்சியின் தலைமைத்துவம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கிண்ணியா, பெரியாற்றுமுனை நகர சபைக்குச் சொந்தமான கட்டிடத்தில் நேற்று (12) இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களாக வெற்றியீட்டியவர்களுடனான சந்திப்பின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான அஷ்ரப் தாஹிர், முத்து முஹம்மது மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

''சில சபைகளில் பிரதித் தவிசாளர்களைப் பெறுவதற்கும் சில சபைகளில் ஆட்சியின் பங்காளர்களாக இருப்பதற்கும் செயற்பட்டு வருகிறோம். குறிப்பாக, வடக்கு,கிழக்கு மற்றும் ஏனைய மாவட்டங்களிலும் உள்ள வாக்களித்த மக்களுக்காக எமது கட்சி சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்வதுடன் அதேபோல, கட்சியினுடைய வேட்பாளர்கள் அரும்பாடுபட்டு தங்களுக்காகவும் கட்சிக்காகவும் ஒன்றுபட்டு வெற்றிக்காக உழைத்த அனைவருக்கும் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கிறேன்.

அதிக பட்ச ஆதரவுகள் கிடைக்கப்பெற்றுள்ள திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய சபைகளில் தலைமைப் பொறுப்பை ஏற்கவும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறோம். நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் நல்ல சபைகளை உருவாக்கி அதன் மூலம் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் உச்ச பயனைப் பெற்றுக்கொடுப்போம்.எதிர்காலத்தில் திருகோணமலை மாவட்டத்துக்கான மாவட்டத் தலைமைத்துவம் மற்றும் மத்திய குழு உள்ளிட்டவற்றை உயர்பீட ஒன்றுகூடலின் பின்பு முடிவெடுப்போம். இம்முறை திருகோணமலை மாவட்டத்துக்கு உள்ளூராட்சித் தேர்தல் நல்லதொரு முடிவுகளை பெற்று மாற்றம் கண்டுள்ளது. இதற்காக கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்'' - என்றார்.




மட்டக்களப்பு, ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் தேவஸ்தான வருடாந்தத் தேர்த்திருவிழா ஞாயிற்றுக்கிழமை காலை ஆலயத்தின் உற்சவகால பிரதம குரு சிவஸ்ரீ கணேச திவி சாந்த குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.(கல்லடி செய்தியாளர்)

# கல்முனை பொலிஸ் நிலையத்தில் வெசாக் தின நிகழ்வு



(பெரியநீலாவணை செய்தியாளர்)

தேசிய வெசாக் வாரத்தை முன்னிட்டு கல்முனை தலைமைப் பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த விசேட வெசாக் தின நிகழ்வு நேற்று(12) பொலிஸ் நிலையத்தின் முன்றிலில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி றம்ஸீன் பக்கீர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்ததோடு, பொதுமக்களுக்கு அன்னதானத்தையும் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டி.எஸ்.ரத்நாயக்க உட்பட இராணுவ உயரதிகாரிகள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.வெசாக் தினத்தை முன்னிட்டு கல்முனை பொலிஸ் தலைமை அலுவலகத்தில் வெசாக் கூடுகள் கட்டப்பட்டு அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வுக் கருத்தரங்கு



(காத்தான்குடி செய்தியாளர்)

சர்வதேச அன்னையர் தினத்தை முன்னிட்டு ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு 'இதயம்' செயற்றிட்டத்தின் ஏற்பாட்டில் பெண்களுக்கான மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பை- வாய்ப்புற்று நோய் தொடர்பான இலவச விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை (11) காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் ஏ.அஹமட் லெப்பை ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது.

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித் தின் வழிகாட்டலில் இதயம் செயற்றிட்டத் தலைவர் எம்.பஹத் ஜுனைட் தலைமையில் ஸ்கை தமிழ் செய்தி ஆசிரியர் சிம்ராவின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் காத்தான்குடி தள வைத்தியசாலையின் வைத்தியர் அலிமா ரஹ்மான், கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலைய பொது முகாமையாளர் ஏ.எஸ்.ஏ.இஸ்ஸதீன், தாதிய உத்தியோகத்தர் வளவாளர் அனிதா அற்புதராஜா மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வை ஏறாவூர் கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்தின் மார்பகப் புற்றுநோய் தடுப்புப் பிரிவு ஒழுங்கமைத்ததுடன் காத்தான்குடி ஜுவலினா நிறுவனம் அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




**தோப்பூர் பொலிஸ் நிலையம் தோப்பூர் வர்த்தக சங்கத்தின் அனுசரணையில் ஏற்பாடு செய்த இன நல்லிணக்க வெசாக் தானம் வழங்கும் நிகழ்வு நேற்று (12) தோப்பூர் சுற்றுவட்டச் சந்தியில் இடம்பெற்றது. இதன்போது வாகனங்களில் பயணித்தோர் மற்றும் இவ்விடத்துக்கு வருகை தந்தோருக்கு தாகசாந்தி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (தோப்பூர் செய்தியாளர்)**



தோப்பூர், பாலத்தோப்பூர் பிரதேசத்திலிருந்து புனித ஹஜ் கடைமையை நிறைவேற்றப் பயணிக்கும் அலிபுகான் சமீம் மற்றும் அவரது மனைவி யூனூஸ் லெப்பை றிபாஸா ஆகியோரை வழியனுப்பும் நிகழ்வு பாலத்தோப்பூர் ஜும்ஆப் பள்ளித் தலைவர் ஜரித் முப்தி தலைமையில் நேற்று(12) நடைபெற்றது. இந்நிகழ்வில் பள்ளிப் பரிபாலன சபை உறுப்பினர்கள், யாத்திரிகர்கள், உலமாக்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (தோப்பூர் செய்தியாளர்)




களுதாவளை, கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவ நிகழ்வில் நேற்று(12) அன்னதான நிகழ்வு இடம்பெற்றது. (பெரியநீலாவணை மேலதிக செய்தியாளர்)




அம்பாறை, புதிய வளத்தாப்பிட்டி சத்ய சாயி சேவா நிலையத்தால் தானசாலை நிலையம் முன்னெடுக்கப்பட்டது. இந்து பௌத்த மத ஒற்றுமையைப் பறைசாற்றும் வகையில் சாயி சேவா நிலையத்தின் தலைவர் சி.சாந்தலிங்கம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (பாண்டிருப்பு செய்தியாளர்)

# வாழைச்சேனையில் ஐஸ் வியாபாரி ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள பிறைந்துறைச்சேனை பிரதேசத்தில் போதைப்பொருள் விற்பனை நிலையமான வீடொன்றை ஞாயிற்றுக்கிழமை (11) இரவு முற்றுகையிட்ட பொலிஸார் 05 கிராம் 670 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் பெண் ஒருவரைக் கைதுசெய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து பிறைந்துறைச்சேனை பிரதேசத்திலுள்ள குறித்த வீட்டை சம்பவ தினம் பொலிஸார் சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர். இதன்போது போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரியான பெண்ணிடமிருந்து 05 கிராம் 670 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளை மீட்டதையடுத்து அவரைக் கைது செய்தனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்டவர் 25 வயதுடைய பெண் எனவும் நீண்ட காலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் இவரது உறவினர்கள் 04 பேர் ஏற்கனவே போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் இரத்ததான முகாம்

(செங்கலடி செய்தியாளர்)

மட்டக்களப்பு, செங்கலடி பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் ஞாயிற்றுக் கிழமை (11) வைத்தியசாலையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு இந்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டதாக செங்கலடி பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவின் பொருளாளர் திருமதி சர்மினி உதயகுமார் தெரிவித்தார்.

குறித்த இரத்ததான முகாமில் வைத்தியசாலை ஊழியர்கள், பொலிஸார், இராணுவத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர்.

செங்கலடி பிரதேச வைத்தியசாலையின் பிரதம வைத்திய அதிகாரி ரி.பரமானந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இளையதம்பி சிறிநாத், வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.



# தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் உறுதிப்படுத்தப்படாத நிலையிலேயே பௌத்த - சிங்கள பேரினவாத அரசு நடக்கிறது

## மட்டக்களப்பு எம்.பி. சிறிநாத் தெரிவிப்பு

(வீரமுனை செய்தியாளர்)

தற்போதைய அரசாங்கமும் தமிழ்த் தேசிய இனத்தை உதாசீனப்படுத்துகின்ற, அலட்சியப்படுத்துகின்ற, அவர்களின் நியாயமான கோரிக்கையை செவிமடுக்காதபோக்கும் தமிழ் மக்களுக்கு இந்த நாட்டிலே நியாயமான உரிமைகளும் உறுதிப்படுத்தப்படாத நிலையிலேயே இந்த பௌத்த - சிங்கள பேரினவாத அரசாங்கம் நடந்துகொள்கின்றதென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் இ.சிறிநாத் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகள், வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகளுக்கான நீதியான நடவடிக்கைகள், தாயக நிலங்கள் விடுவிக்கப்படும் வரையில் இந்த நாடு முன்னேற்றகரமான நிலைக்கு செல்லமுடியாதென்ற விடயத்தை சிங்கள அரசும் சிங்கள தேசிய இனமும் உணர்ந்துகொள்ளவேண்டுமெனவும் தெரிவித்தார்.

தமிழின அழிப்பு வாரம் நேற்று முன்தினம் (11) மட்டக்களப்பு மாவட்டத்தில் உணர்வுபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. மட்டக்களப்பில் பெருமளவான மக்கள் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சத்துருக்கொண்டான் நினைவுத்தூபிக்கருகில் தமிழின அழிப்பு வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர் செல்வகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களான தயாளகௌரி, டினேஸ், தனுபிரதீப் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றியத் தலைவர் எஸ்.சிவயோகநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது சத்துருக்கொண்டான் படுகொலை நினைவுத்தூபியில் முள்ளிவாய்க்கால் மற்றும் சத்துருக்கொண்டான் படுகொலையில் உயிர்நீத்தவர்களின் ஆத்ம சாந்திக்காக விளக்கேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அகவணக்கமும் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து உப்பில்லாக்கஞ்சி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த சிறிநாத் எம்.பி.,

''எங்கெங்கு தமிழர்கள் கொத்துக்கொத்தாக அழிக்கப்பட்டார்களோ அங்கெல்லாம் இனஅழிப்பு வார நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இந்தச் சத்துருக்கொண்டான் பகுதியிலே பாரிய படுகொலைகள் நடத்தப்பட்ட வரலாறுகள் இருக்கின்றன. ஓர் இன அழிப்பு நோக்குடன் வடக்கு,கிழக்கில் பல படுகொலைகள் நடத்தப்பட்டதுடன் எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காக பல இடங்களில் படுகொலைகளும் நடத்தப்பட்டிருந்தன. சத்துருக்கொண்டானின் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் கொண்டுசெல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டாலும் அந்த விசாரணைகள் பின்னர் முடக்கப்பட்டன. இன்று இந்த அரசாங்கம் பட்டலந்த வதை முகாம் விடயங்களைக் கையிலெடுத்து அது தொடர்பான விசாரணைகளை மீள முன்னெடுத்திருக்கும் அதேநேரம், வடக்கு,கிழக்கில் பல இடங்களில் படுகொலைகள் நடைபெற்ற வரலாற்றின் சாட்சியங்களாகவும் ஆவணங்களாகவும் இருக்கின்றபோதிலும் அது தொடர்பான எந்த முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்படாமல் தமிழ் மக்களை உதாசீனப்படுத்துகின்ற, அவர்களின் நியாயமான கோரிக்கையை செவிமடுக்காத போக்கு தமிழ் மக்கள் இந்த நாட்டில் வாழ்வதற்கான உறுதிப்பாடற்ற நிலையிலே அவர்களுக்கான நியாயமான உரிமைகள், அவர்களின் சுதந்திரமான வாழ்க்கைக்கான உறுதிப்பாடுகள் இல்லாத நிலையிலேயே சிங்கள - பௌத்த தேசிய அரசுகள் நடந்துகொள்கின்றன.

2009ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதிக்கட்டத்திலே பொதுமக்கள் கொத்துக்கொத்தாக இலட்சக்கணக்கில் கொல்லப்பட்ட சம்பவமானது தமிழினத்தை இந்த நாட்டில் இல்லாமல் செய்வதற்கும் வடக்கு, கிழக்கு தாயகப் பகுதியில் தமிழ் மக்களின் இனப்பரம்பலைக் குறைத்து கையேந்தும் நிலையிலேயே நிர்க்கதியற்ற நிலையில் தமிழ் மக்கள் வாழவேண்டும். தமிழ் மக்கள் தமது உரிமைகளை இனியொருபோதும் போராடிக் கேட்கக்கூடாது என்ற அடிப்படையிலே பல்வேறு திட்டமிட்ட படுகொலைகள் நடந்தேறின.இந்தப் படுகொலைகளுக்கான நீதி, நியாயம் கூட எந்தவகையான வழிகளிலும் கிடைக்கப்பெறவில்லை. யுத்தம் மௌனிக்கப்பட்டு 16 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் நீதி, நியாயத்துக்காக தமிழ்த் தேசிய சக்திகள் தமிழ் இனத்தில் பற்றுக்கொண்ட அமைப்புகள் முன்னெடுக்கின்றபோதிலும் அதற்கான எந்த அங்கீகாரத்தையும் இந்த நாடு வழங்கவில்லை.

இவ்வாறான செயற்பாடுகள் இந்த நாட்டில் நியாயமாக, நிம்மதியாக வாழமுடியுமென்ற நம்பிக்கையை இல்லாமல் செய்துள்ளன. இன்று இந்தப் பொருளாதார நெருக்கடிக்குக் கூட தமிழ் மக்கள் இரண்டாம் தரப்பாக அடக்கி ஒடுக்கப்படுதலே காரணமாக அமைந்திருக்கின்றது. இவற்றை சிங்கள தேசிய இனம் புரிந்துகொள்ளாத நிலையில் இந்த நாடு சுபீட்சமான நாடாக மாறுவதற்கு எந்த விதமான வாய்ப்புகளும் இல்லை. தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல்கைதிகளுக்கான நீதியான நடவடிக்கைகள், தாயக நிலங்கள் விடுவிக்கப்படும் வரையில் இந்த நாடு முன்னேற்றகரமான நிலைக்கு செல்லமுடியாதென்ற விடயத்தை சிங்கள அரசும் சிங்கள தேசிய இனமும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

ஓர் இனத்தின் விடுதலையானது, ஓர் இனத்தின் இருப்பானது மிக காத்திரமான முறையில் ஓர்அரசாங்கத்தால் பாதுகாக்கப்படாவிட்டால் நாட்டில் மக்கள் நம்பிக்கையற்ற சூழ்நிலையில் வாழும் நிலையேற்படும். அந்தவகையில், 2009ஆம் ஆண்டு ஏற்பட்ட இன அழிப்புக்கு நீதி, நியாயம் கிடைக்கவேண்டும். இந்தச் சம்பவங்கள் எமது அடுத்த சந்ததிக்கு கொண்டுசெல்லப்படவேண்டும். இவ்வாறான படுகொலைகளும் அடக்குமுறைகளும் கடந்தகாலத்தில் நடைபெற்றதென்பதை எதிர்கால சந்திக்கு கொண்டுசென்று எமது தமிழ்த் தேசியத்துக்கான தொடர்ச்சியான போராட்டத்தையும் தமிழ்த் தேசிய விடுதலைக்கான போராட்டத்தையும் எமது இளம் சந்ததிகள் தெரிந்துகொள்ளவேண்டும் அதனை முன்கொண்டு செல்லவேண்டும் - என்றார்





தமிழின அழிப்பு வாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று(12) உணர்வுபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. மட்டக்களப்பில் பெருமளவான மக்கள் கடத்தப்பட்டு படுகொலைசெய்யப்பட்ட சத்துருக்கொண்டான் நினைவுத்தூபிக்கருகில் தமிழின அழிப்பு வாரம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. சிவில் சமூக செயற்பாட்டாளர் செல்வகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் இ.சிறிநாத் கலந்துகொண்டார். (வீரமுனை செய்தியாளர்)

# ஹக்கீம் காங்கிரஸாக மாறியுள்ள முஸ்லிம் காங்கிரஸை மக்கள் தோற்கடித்துள்ளனர்

## ஐக்கிய மக்கள் காங்கிரஸ் செயலாளர் எஹியாகான் சாடல்




(மாளிகைக்காடு செய்தியாளர்)

''ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பின் மறைவுக்குப் பின்னர் படிப்படியாக கட்சி அழிந்து இப்போது ஹக்கீம் காங்கிரஸாக மாறியிருக்கிறது. இதனால் ஹக்கீம் காங்கிரஸுக்கு இம்முறை முஸ்லிம் வாக்காளர்கள் நல்ல பாடம் புகட்டியிருக்கிறார்கள். ஒரு சிலரின் தனியார் கம்பனி போன்று இயங்கும் இவர்களின் ஆணவத்தை முஸ்லிம் மக்கள் நிராகரித்து ஹக்கீமின் தலைமைத்துவத்தைத் தோற்கடித்திருக்கிறார்கள். அவருக்கு மாற்றீடான தலைமைத்துவமாக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வை மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை'' - என ஐக்கிய மக்கள் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஏ.சி.எஹியாகான் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் காங்கிரஸ் காரியாலயத்தில் நேற்று(12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

''பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, நிந்தவூர், இறக்காமம், மாவடிப்பள்ளி, மாளிகைக்காடு மற்றும் நாவிதன்வெளி போன்ற இடங்களிலிருந்து மக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை வெளியேற்றியிருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக கல்முனை தொகுதியில் இருந்தும் எதிர்காலத்தில் படுதோல்வியுடன் மு.கா. வெளியேறும். முஸ்லிம் காங்கிரஸின் 93 உயர்பீட உறுப்பினர்களும் ஒன்றிணைந்து கல்முனைக்கு வந்தாலும் ஹரீஸின் அரசியல் முன்னெடுப்புகளுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் தோல்வியுடன் வெளியேறிச் செல்வார்கள்.

வாயிருப்பவர்களிடம் வாக்கு இல்லை. வாக்கு இருப்பவர்களிடம் வாயில்லை. எனும் நிலையில் ஹக்கீமின் பின்னால் இருப்பவர்கள் வாயை மட்டும் வைத்துக்கொண்டு இருப்பவர்கள் வாக்கில்லாதவர்களே என்பதை மக்கள் இம்முறை நிரூபித்துள்ளார்கள். தலைவரின் சூழ்ச்சியால் கட்சிக்குள் பிரமுகர்களிடையே பிரச்சினையை உருவாக்கி அதில் அவர் குளிர்காய்ந்து கொள்கிறார்.

அக்கரைப்பற்று மக்கள் அதாஉல்லாவின் பக்கம் ஒன்றிணைந்தது போல, முஷாரப்பின் பின்னால் பொத்துவில் மக்கள் ஒன்றிணைந்தது போல, மாஹிரு டன் சம்மாந்துறை மக்கள் ஒன்றிணைந்தது போல, கல்முனை தொகுதி மக்கள் ஹரீஸுடன் இருக்கிறார்கள் என்பதை ஒரு தேர்தல் வந்தால் எல்லோரும் தெரிந்து கொள்வார்கள்.

முஸ்லிம் சமூகத்தின் சாபக்கேடான ஹக்கீம் காங்கிரஸை தோற்கடிக்க சகோதரர் ஹரீஸின் அணியில் இணைந்து பயணிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். கல்முனை தொகுதியில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபையிலும் மாகாண சபையிலும் நாங்கள் ஹக்கீம் காங்கிரஸை துரத்தி மக்களுக்கு விமோசனத்தைப் பெற்றுக்கொடுப்போம்.

கல்முனையையும் சாய்ந்தமருதையும் கசப்புணர்வுடன் மாற்றியமைக்க ஹக்கீம் காங்கிரஸ் செய்த சதிகளை நாங்கள் அறிவோம். பொத்துவில் மக்கள் மு.காவை வெறுத்து முஷாரப்புடன் கைகோர்த்துள்ளார்கள்.

பொத்துவிலில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து முஷாரப் ஆட்சியமைப்பாராயின் அடுத்த முறை அவர் ஒரு வட்டாரத்தையும் வெல்ல மாட்டார். விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் தேசிய மக்கள் சக்தி அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அதிகாரத்தில் இருக்கும். அதனைப் பலப்படுத்தி சமூக தேவைகளை அடைந்துகொள்வதே புத்திசாலித்தனம். அதை விடுத்து ஹக்கீம் காங்கிரஸின் பின்னால் சென்று நாம் நஷ்டமடைய முடியாது'' - என்றார்.

# நெற்செய்கை உற்பத்தித் திறனை அதிகரித்தல் குறித்து தொழில்நுட்ப விழிப்பூட்டல் நிகழ்வு



(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பிரதி விவசாயப் பணிப்பாளரின் வழிகாட்டலின்படி, வாகரை விவசாய போதனாசிரியர் பிரிவிலுள்ள ஆலங்குளம் பிரதேசத்தில் நெற்செய்கையில் உற்பத்தித்திறனை அதிகரித்தல் தொடர்பான தொழில்நுட்ப விழிப்பூட்டல் நிகழ்வு சனிக்கிழமை (10) நடைபெற்றது.

இதன்போது விவசாயிகள் தங்களது விளைச்சலை அதிகரிப்பதற்கேற்ற வகையில் சிறந்த விதைகளை எவ்வாறு தெரிவுசெய்வதென்பது தொடர்பாகவும் முளை கட்டல், நாற்று மேடை தயாரிப்பு மற்றும் பரசூட் முறை மூலம் விதை பயிர் நடுகை மேற்கொள்வது தொடர்பான விடயங்கள் குறித்தும் விவசாயிகளிடையே செயல்முறை பயிற்சி மூலம் நிகழ்த்திக் காட்டினர்.

இவ் விழிப்புணர்வு நிகழ்வானது விவசாயிகளின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் தங்களது நீண்டகால சந்தேகங்களை தீர்த்துக்கொள்வதற்கும் வாய்ப்பாக அமைந்திருந்ததாக நிகழ்வில் கலந்துகொண்ட விவசாயிகள் ஏற்பாட்டு குழுவினருக்கு நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் வடக்கு வலய விவசாய திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் ஐ.எல்.பௌசுல் அமீன் கலந்து கொண்டு விரிவுரைகளை நிகழ்த்தினார். வலய விவசாய போதனாசிரியர்களும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு நெற் செய்கையின் உற்பத்தி திறன் தொடர்பான தெளிவுபடுத்தலை மேற்கொண்டிருந்தனர்.



கோட்டைக்கல்லாறு பொது மயானம் கிளின் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் துப்புரவு செய்யப்பட்டது. மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் தருமரெத்தினம் சுதாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்ட கோட்டைக்கல்லாறு பொதுமயானத்தின் உள்ளேயும் வெளியேயும் துப்புரவு செய்யப்பட்டது. களுதாவளை பிரதேச சபையின் கழிவகற்றும் வாகனம் மற்றும் ஊழியர்களும் ஒத்துழைப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (பாண்டிருப்பு செய்தியாளர்)

# காரைதீவு பிரதேச சபைக்கு தெரிவாகியுள்ள சுயேச்சை ஆசனத்தை மாவடிப்பள்ளிக்கு வழங்க வேண்டும்

## பிரதேச வாழ் மக்கள் கோரிக்கை

(பாறுக் ஷிஹான்)


நடைபெற்று முடிந்த 2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபைக்குத் தெரிவாகியுள்ள சுயேச்சைக் குழு ஆசனத்தை ஒரு வருடமேனும் மாவடிப்பள்ளிக்கும் வழங்க வேண்டுமென மாவடிப்பள்ளி வாக்காளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபைக்கு தையல் இயந்திரம் சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சைக் குழு போதியளவு வாக்குப் பெறாமையால் மாளிகைக்காடு கிழக்கு வட்டாரத்தை இழந்திருந்தது. அதில் பிரதான வேட்பாளர் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் ஏ.எம்.ஜாஹிர் பட்டியல் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார். அத்துடன், மாளிகைக்காடு மாவடிப்பள்ளி பிரதேச மொத்த வாக்கு அடிப்படையில் குறித்த பட்டியல் (போனஸ்) ஆசனமொன்று கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் ஏ.எம்.ஜாஹிர் மாவடிப்பள்ளி வாக்குகளைப் பெற்று எந்த விதமான பட்டியல் ஆசனங்களையும் எவருக்கும் கொடுக்கவில்லையென்ற ஐயப்பாடு மக்களிடத்தில் வெகுவாகப் பரவியது. இருந்தும் இம்முறையும் மாவடிப்பள்ளி வாக்காளர்களை கறிவேப்பிலையாகப் பயன்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாது என்று அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அந்த அடிப்படையில் இந்த ஆசனம் ஒரு வருடமேனும் மாவடிப்பள்ளிக்கும் வழங்கப்பட வேண்டும்.

அது மாவடிப்பள்ளி சுயேச்சைக் குழு வேட்பாளர் எம்.ஆர்.எம்.மர்ஷாத்துக்கு பிரதேச சபை வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். மாளிகைக்காடு கிராமத்துக்கு ஏலவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி மற்றும் சுயேச்சை என்று மூன்று ஆசனங்கள் கிடைத்துள்ளன. ஆனால், மாவடிப்பள்ளிக்கு ஒரேயொரு ஆசனமே கிடைக்கப்பெற்றது.

எனவே, மாவடிப்பள்ளிக்கே அந்த ஆசனத்தில் ஒரு வருடமாவது காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் ஏ.எம்.ஜாஹிரால் வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. மாளிகைக்காடு கிழக்கு வட்டாரத்தில் 479 வாக்குகளைப் பெற்று சுயேச்சை அணித்தலைவர் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் ஏ.எம்.ஜாஹிர் பட்டியல் (போனஸ்) ஆசனத்தைப் பெற்றுள்ளார். ஆகவே, சுயேச்சைக் குழுத் தலைவர் இதனை உணர்ந்து இந்த ஆசனத்தை மாவடிப்பள்ளிக்கும் தாராள மனம் கொண்டு ஒரு வருடம் வழங்க வேண்டுமென அப்பிரதேச வாழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



வெசாக் தினத்தையொட்டி மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து ஒரு பெண் கைதி உட்பட 16 கைதிகள் நேற்று (12) காலை ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டதாக சிறைச்சாலை அத்தியட்சகர் என்.பிரபாகரன் தெரிவித்தார். இதன்போது பிரதம ஜெயிலர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். சிறு குற்றம் புரிந்த, தண்டனைப் பணம் செலுத்தாத கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட கைதிகளாவர். விடுதலை செய்யப்பட்ட கைதிகள் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நன்றி செலுத்திய பின்னர் வீடுகளுக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது. (காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)

# பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைக்கு

# ஆதரவு கிடையாது

## ரவூப் ஹக்கீம் உறுதி



''இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் உள்ள உறவு தொடர்ந்து நல்ல நிலையில்தான் இருக்கிறது. மீன் வளத்தை இந்தியா, இலங்கை மீனவர்கள் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைக்கு ஆதரவு கிடையாது'' - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

திருச்சி மாவட்டம், புத்தாநத்தத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்கச் சென்றபோது செய்தியாளர்களுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவருடனான முழுமையான உரையாடல் பின்வருமாறு,

**இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறீர்கள்... இந்தியா - பாகிஸ்தான் போர் தொடங்கியிருக்கும் நிலையில், இது தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாடு என்ன?**

எமது அரசாங்கம் ஒரு பொதுவான நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது. பிராந்தியத்திலுள்ள இரண்டு நேச நாடுகளுக்கிடையில் மூண்டுள்ள இந்தப் போரில் அணிசேரா நிலையைக் கடைப்பிடிப்பதென்பதே அந்த முடிவு. இதில் ஒருபக்கச் சார்பாக எதையும் நாங்கள் பேசும் நிலையில் இல்லை எனும் பொருள்பட எங்களது ஜனாதிபதி ஓர் அறிக்கையை விட்டிருக்கிறார். அதுதான் எங்களுடைய கருத்தும்.

நாங்கள் வெவ்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், நாட்டின் வெளியுறவுக் கொள்கை உள்ளிட்ட பொதுவான நிலைப்பாடுகளில் நாங்கள் மாற்றுக் கருத்தில் இருக்க விரும்பவில்லை.

**பயங்கரவாதிகளுக்கெதிரான தாக்குதல் இது என்பதால், இதில் பொதுமக்களைத் தாக்குவதற்கு வாய்ப்பில்லை... பயங்கரவாதிகள் மட்டுமே இதில் தாக்குதலுக்குள்ளாவார்கள் என்றும் அதே நேரத்தில், பாகிஸ்தானுடைய தாக்குதலால் இந்திய பொதுமக்கள் தாக்குதலுக்குள்ளாகி யிருக்கின்றனர் என்றும் இந்திய அரசு கூறுவது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பயங்கரவாதத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடு இலங்கை என்ற அடிப்படையில், பயங்கரவாதத்தை அரசியலுக்காகப் பயன்படுத்தும் எந்தத் தரப்போடும் நாங்கள் உடன்படப் போவதில்லை. அதற்கு ஆதரவு அளிக்கப்போவதுமில்லை. இதுதான் எங்களது பொதுவான நிலைப்பாடு. இதுபோக, பயங்கரவாதம் எந்த வடிவில் வந்தாலும் - எடுத்த எடுப்பிலேயே ஒரு தரப்பைக் குறைகூறுவதற்கு முன்பு அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பது நல்லது. அந்த நோக்கில் முதலில் அது குறித்து தீர விசாரிக்கப்பட வேண்டும்.

**தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இலங்கை அரசு தொடர்ந்து தாக்குதல் நடத்திவரும் நிலையில், இதற்கான தீர்வு குறித்து உங்கள் கருத்து என்ன?**

எங்களைப் பொறுத்தவரையில் இது மிகவும் கவலைக்குரிய விடயம். மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை இது என்பதால் இயன்றவரை இரு தரப்பினரிடையேயும் சுமூகமாகப் பேசி பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதே சரியானதாக இருக்கும். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான கடற்பரப்பு என்பது மிகவும் குறுகிய அளவிலானதாகும். இங்குள்ள மீன்வளம் உரிய முறையில் பாதுகாக்கப்பட வேண்டும். இருநாட்டு மீனவர்களும் மீன் வளர்த்து சரியான முறையில் அனுபவிப்பதற்கான முறைப்படியான திட்டமிடல் இருக்க வேண்டும்.

அந்த அடிப்படையில், கடலின் அடியாழம் வரை சென்று மீன்வளத்தை முற்றிலுமாக வாரிச் சுருட்டி அள்ளிச் செல்லும் நிலை தடைசெய்யப்பட்டிருக்கிறது. அதையும் மீறி அப்படியான சில செயற்பாடுகள் நடக்கின்றன என்று இலங்கைத் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகிறபோது, அவ்வப்போது சில படகுகள் பறிமுதலும் செய்யப்படுகின்றன. இந்தப் பிரச்சினை நீதிமன்றம் வரை செல்லும்போது தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்குமிடையில் அடிக்கடி வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

மொத்தத்தில் வன்முறை தவிர்க்கப்பட வேண்டும். இருநாட்டு மீனவர்களும் ஒற்றுமையுடன் தமது வாழ்வாதாரத்துக்கான மீன்வளத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். மீனவர்களின் இந்த வாழ்வாதாரப் பிரச்சினையில் துப்பாக்கிப்பயன்பாடென்பது இரு நாடுகளுக்குமிடையில் தொடரும் உறவைச் சிக்கலாக்கும்.

இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பாக பலமுறை பல காலகட்டங்களில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டும் இதுவரை நிரந்தரமான இணக்கம் எட்டப்படவில்லையென்பது மிகவும் கவலைக்குரியது. என்னைப் பொறுத்தவரை இந்திய ஒன்றிய அரசின் மீன்பிடித்துறை நடத்தும் பேச்சுவார்த்தைக்கு முன்பாக தமிழ்நாட்டு அரசின் மீன்வளத்துறை அமைச்சுடன் தீவிரமாகப் பேசி தீர்வுகள் எட்டப்பட வேண்டும். எங்கள் வடக்கு ஆளுநர் தரப்பிலும் தமிழ்நாடு அரச தரப்பிலும் இது தொடர்ந்து பேசப்பட வேண்டிய முக்கியமான அம்சமாக இருக்கிறது.

இந்தப் பிரச்சினை நீடித்துக்கொண்டே செல்வதால் தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்குமிடையில் ஏற்கனவே இருந்து வரும் ஏனைய விவகாரங்களில் உள்ள உறவும் பாதிப்புக்குள்ளாகி விடக்கூடாது என்று நாங்கள் கவலையடைகிறோம்.

**இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்காக இலங்கை அரசின் சார்பில் இந்திய ஒன்றிய அரசை இதுவரை நீங்கள் எப்போதாவது அழைத்திருக்கிறீர்களா?**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் இலங்கை வந்திருந்தபோது இந்த மீனவர் பிரச்சினை தொடர்பாக இருதரப்புகளும் தீவிரமாகப் பேசியிருக்கின்றன. மேலதிக நடவடிக்கைகளுக்குச் செல்வதற்கு முன் இன்னும் சில சந்திப்புகளுக்கு ஏற்பாடு செய்வது குறித்தும் கதைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு தரப்புகளுக்குமிடையில் வணிகச் செயற்பாடுகள் தொடர்பாக நிரந்தர கூட்டு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. அதற்குள் இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினையும் உள்ளடக்கப்பட வேண்டும். அதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்பட வேண்டுமென்று நாங்களும் வெளிநாட்டு அமைச்சு சார்ந்த கலந்தாய்வுக் கூட்டங்களிலும் கருத்துத் தெரிவித்திருக்கிறோம்.

**இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடந்துள்ள நிலையில், ஆளுங் கட்சிக்கு ஆதரவான சூழல் நாட்டில் எந்த அளவுக்குள்ளது?**

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஆளுங்கட்சிக்குக் கிடைத்த பாரிய வெற்றியில் இருந்து பெரிய பின்னடைவை இந்தத் தேர்தல் மூலம் ஆளுங்கட்சி சந்தித்திருக்கிறது. குறிப்பாக, உள்ளூராட்சி மன்றங்களில் கணிசமான இடங்களைக் கைப்பற்றி ஆட்சியில் அமரும் சூழலில் அது இருந்தாலும், ஏற்கனவே பாராளுமன்றத் தேர்தலில் அவர்களுக்குக் கிடைத்த வாக்குகளில் மூன்றில் ஒரு பங்கு வாக்குகள் குறைவாகத்தான் தற்பொழுது பெற்றிருக்கிறது.

குறிப்பாக, சிறுபான்மை பிரதேசங்களில் ஆளுங்கட்சிக்கு கடந்த தேர்தலில் கிடைத்த வாக்குகளிலிருந்து இப்பொழுது மிகப்பாரிய வீழ்ச்சியை அது சந்தித்திருக்கிறது. இது சிறுபான்மை மக்களுக்கிடையில் ஆளுங்கட்சியாளர்களுக்கு ஜனாதிபதி பொதுத் தேர்தலில் இருந்த ஆதரவில் பெரும் மாற்றம், வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமையைக் காட்டுகிறது.

**இதற்கான காரணம் என்னவென்று கருதுகிறீர்கள்?**

எம் நாட்டின் சிறுபான்மை மக்களைப் பொறுத்தமட்டில் ஆட்சியாளர்களது பெருந்தேசியவாத கோட்பாடுகளில் உண்மை நிலை வேண்டுமென்றே மறைக்கப்பட்டு, சிறுபான்மையினரின் வாக்குகளைக் கவருவதற்காக அவர்கள் போலி நாடகம் ஆடினார்கள் என்ற ஒரு கருத்து நிலவுகிறது.

இதன் காரணமாக, அவர்களுடைய வெளியுறவுக் கொள்கைகளிலும் ஏற்கனவே பெரிய வாய்ச்சவடால் அறிக்கைகளை எல்லாம் விட்டுக்கொண்டிருந்தார்கள். அவற்றையெல்லாம் மீறி, அதற்கு மாற்றமாக அரசாங்கம் நடந்து கொள்கிறது என்ற ஒரு கருத்து சிறுபான்மை மக்களிடையே இருந்து கொண்டிருக்கிறது.

இது அவர்களுக்கு இருந்த செல்வாக்கில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதையே காண்பிக்கிறது.

அண்டை நாடுகளுக்கிடையே நடைபெறும் யுத்தத்தில் அணிசேரா நடுநிலை வகிக்கப்போவதாக இலங்கை அரசு அறிவித்திருக்கிறது. பிராந்தியத்தில் இருக்கும் நேச நாடுகளுக்கிடையில் மூண்டிருக்கின்ற இந்த யுத்தம் விரைவில் முடிவுக்கு வரவேண்டும். சமாதானம் நிலவ வேண்டும் என்று எங்களது நாட்டின் ஜனாதிபதி வலியுறுத்தி அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இதுவே எங்கள் அரசின் கொள்கையாக உள்ளது.

எங்கள் நாட்டிலிருந்து வெளியே செல்கின்ற அரசியல்வாதிகளாகிய நாங்கள் யாராக இருந்தாலும் நாட்டின் வெளியுறவுக் கொள்கை தொடர்பில் அதே கருத்தில்தான் இருப்போம்.

**இந்தியாவும் - இலங்கையும் முழு நட்புறவில் உள்ளனவா?**

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் உள்ள உறவு தொடர்ந்து நல்ல நிலையில்தான் இருந்துகொண்டிருக்கிறது. இலங்கைக்கு அண்மையில் இந்தியப் பிரதமர் மோடி வந்து நிறைய ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருக்கிறார்.

குறிப்பாக, இலங்கை தலைமன்னாருக்கும் இந்தியாவின் இராமேஸ்வரத்துக்கும் கடைசியில் நிலவழியில் நிரந்தரமான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்ற அபிலாஷை எங்களுக்கு நீண்டகாலமாக இருந்து கொண்டிருக்கிறது. இந்திய அரசின் தரப்பில் அதற்கு ஆர்வம் காட்டப்பட்டாலும் இலங்கை அரசு அது குறித்து சரியான பதிலைத் தரவில்லையென்ற காரணத்தால் அந்த விஷயம் பின்தள்ளப்பட்டிருக்கிறது. இது கவலைக்குரிய ஒன்றாகும்.



இலங்கையின் சிறுபான்மை மக்கள் என்ற அடிப்படையில் தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் இருக்கிற தொடர்பு தமிழ்நாட்டுக்கும் தமிழ் பேசும் இலங்கை பிரதேச மக்களுக்குமிடையில் இந்தப் போக்குவரத்து அமைந்தால் இன்னும் அதிகரிக்கும், உறவுகளும் வலுப்படுமென்பது மாத்திரமல்ல, வர்த்தக ரீதியான தொடர்புகளுக்கு வளர்ச்சி தரக்கூடியதாகவும் அது அமையும்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளாக வருவோரின் எண்ணிக்கை தற்காலத்தில் கணிசமான அளவுக்கு அதிகரித்திருக்கிறது. அதையும் இன்னும் பல மடங்கு கூட்டுவதற்கும் இந்த ஏற்பாடு வசதி வாய்ப்பை உருவாக்கித் தருமென்ற காரணத்தால் இது தொடர்பில் நாங்கள் பெரும் ஆர்வத்துடன் இருக்கின்றோம்.

எனினும், இலங்கை அரசு இதில் சற்று சரியான பதிலைக் கொடுக்கவில்லை என்ற காரணத்தால் இப்படியொன்று அமையும் பொழுது அதனால் கிடைக்கப் போகிற பொருளாதார அனுகூலங்கள் அலாதியாக இருக்கும். இரு நாடுகளுக்கிடையிலும் கடலுக்கு மேலால் பாலங்களை அமைப்பதென்பது, அதை இன்று செய்யத் தொடங்கினாலும் முழுமையாக நிறைவடைவதற்கு ஒரு பத்தாண்டுகளாவது எடுக்குமென்கிறபோது குறைந்தபட்சம் அடுத்த 10 ஆண்டுகளுக்கு அப்படி அனுகூலங்கள் எதையும் அடைவதற்கான சாத்தியம் இல்லை என்ற நிலை உருவாகியிருக்கிறது.

**தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படுவதாகக் கூறப்படுகிறதே... இதற்கு என்றைக்காவது தீர்வு ஏற்படுமா?**

இதற்கான நிரந்தரத் தீர்வு காண்பது குறித்து இரு தரப்பினரும் தீவிரமாக ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தமட்டில் இலங்கை கடற்படையினரோடு தமிழ்நாட்டு மீனவர்களுக்கு தொடர்ந்து ஏற்படுகின்ற சர்ச்சைகள், அவ்வப்போது நடைபெறும் துப்பாக்கிச் சூடு போன்ற விவகாரங்களெல்லாம் மிகுந்த கவலைக்குரியன.

இருதரப்புகளும் பேசி இதற்கு முடிவுகாணவேண்டுமென்று சொன்னாலும் இன்னும் அதற்கான சாத்தியம் உருவாகவில்லை. என்னைப் பொறுத்தமட்டில் சர்வதேச ஆழ்கடல் மீன்பிடி உள்விவகாரங்களில் இருதரப்புகளும் மிகவும் குறுகிய ஒரு கடற்பரப்பில் அளவுக்கதிகமாக மீன்களைக் காவு கொள்ளப்போய், மீன் வளங்களும் பாதிக்கப்படுகிற நிலை காணப்படுகிறது.

எனவே, இது தொடர்பாக விட்டுக் கொடுத்தல் அடிப்படையில் இரண்டு அரசுகளும் தீவிரமாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இருதரப்புகளுக்கும் அவர்களது கடல் எல்லையைத் தாண்டியும் ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்குத் தேவையான வசதிகளை இருதரப்பிலும் செய்து கொடுப்பது இந்தப் பிரச்சினையை ஓரளவுக்கு தீர்க்குமென்று நம்புகிறோம்.

**கச்சதீவு என்ற ஒன்றை வைத்துக் கொண்டு இந்திய அரசும் இலங்கை அரசும் ஒரு பெரிய அரசியலைச் செய்து கொண்டிருக்கின்றன. கச்சதீவை காங்கிரஸ் இலங்கைக்குத் தாரைவார்த்து விட்டதென்று இப்பொழுது இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் பா.ஜ.க. அரசு குற்றஞ் சாட்டி அது தொடர்பான பேச்சுகள் நாட்டில் பரவலாக ஓடிக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு தடவையும் தேர்தல் நேரத்தில்தான் இந்தக் கச்சதீவு குறித்து பெரிதாகப் பேசுகின்றார்கள். இதுகுறித்து உங்கள் கருத்து என்ன?**

கச்சதீவு விவகாரம் 1970களில் இருந்து ஓடிக்கொண்டிருக்கிறது. ஒப்பந்த அடிப்படையில் விட்டுக்கொடுத்தல் மூலம் இலங்கையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசம் என்று இருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரை அதை அரசியலுக்காக சர்ச்சைக்குரிய பிரச்சினையாக வெவ்வேறு அரசியல் கட்சிகள் இந்தப் பிரச்சினையை தூக்கிப் பிடித்துக்கொண்டிருக்கின்றன.

குறிப்பாக, தற்போதைய ஒன்றிய அரசைச் சார்ந்த கட்சியினர், மாநில அரசாங்கங்களுக்கிடையில் இருக்கிற அரசியல் போட்டியின் காரணமாக இது தொடர்பில் முன்னுக்குப் பின் முரணாக தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் கச்சதீவு விவகாரம் என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஓர் அம்சம். குறிப்பாக, அண்மையில் கச்சதீவு அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்ற திருவிழாவில் இருதரப்புகளும் குறிப்பாக, இலங்கை கடற்படையினரும் இந்தியர்களும் அங்கு வழிபட வந்த எல்லா இந்தியர்களுக்கும் எல்லா உபசாரங்களையும் செய்கிற ஒரு நிலை இருந்தது.

இலங்கை அரசு அவர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து மிகவும் சுமூகமாக இந்த வழிபாட்டு நிகழ்ச்சிகளை முன்னின்று ஒற்றுமையாகக் கடத்திக்கொடுத்திருக்கிறார்கள்.

இது நல்லதொரு செய்கை. இருந்தாலும், அரசியல் ரீதியாக இந்தப் பிரச்சினை அடிக்கடி தேர்தல் காலங்களில் மட்டும் விவகாரமாகத் தூக்கிப்பிடிக்கப்படுவது சர்வ சாதாரணமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இது குறித்து நாங்கள் தனிப்பட்ட முறையில் எந்தக் கருத்தையும் சொல்வதற்கில்லை - இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநிலத் தலைவர் நெல்லை முபாரக், சிங்கப்பூர் ரோயல் கிங்ஸ் நிறுவுநர் சிராஜுதீன், சதக்கத்துல்லா, முஹமது ரியாஜ், இமேஜ் சாகுல் ஹமீது மற்றும் பலர் உடனிருந்தார்கள்.

**-திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது-**

## 'கோவிந்தா' கோஷம் விண்ணைப் பிளக்க...

# வைகையில் எழுந்தருளிய கள்ளழகர்



மதுரை சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வாக நேற்று (12) காலை 06 மணியளவில் ''கோவிந்தா... கோவிந்தா...'' கோஷம் விண்ணை பிளக்க, பச்சை பட்டுடுத்தி வைகை ஆற்றில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார் கள்ளழகர்.

உலகப் புகழ்பெற்ற மதுரை சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும் நிகழ்வு ஆண்டுதோறும் விமர்சையாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சித்திரை திருவிழா கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தினமும் காலை, மாலை இருவேளைகளில் சுவாமி - அம்மன் பல்வேறு வாகனங்களில் வீதி உலா வந்தனர். விழாவின் முக்கிய நிகழ்வுகளான மீனாட்சி திருக்கல்யாணம், தேரோட்டம் நடந்த நிலையில், கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் நேற்று நடந்தது.

இதற்காக, மே 10ஆம் திகதி அழகர் கோயிலிலிருந்து புறப்பட்டு மதுரைக்கு வந்த கள்ளழகருக்கு நேற்றுமுன்தினம் அதிகாலை 5.30 மணிக்கு மூன்றுமாவடியில் எதிர்சேவை நடந்தது.

இதனையடுத்து நேற்று (12) அதிகாலை கருப்பண்ணசுவாமி கோயில் முன், ஆயிரம் பொன் சப்பரத்தில் எழுந்தருளிய கள்ளழகர், மீண்டும் தங்கக் குதிரை வாகனத்தில் வைகை ஆற்றை நோக்கிப் புறப்பட்டார். வழிநெடுகிலும் கள்ளழகர் மீது தண்ணீர் பீச்சி அடித்தும் சர்க்கரை தீபம் ஏற்றியும் பக்தர்கள், அவரை கண்குளிர தரிசனம் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை 06 மணியளவில், பச்சைப்பட்டுடுத்தி, தங்கக்குதிரை வாகனத்தில், வைகையில் கள்ளழகர் எழுந்தருளினார். வெள்ளிக்குதிரை வாகனத்தில், அவரை வீரராகவ பெருமாள் வரவேற்றார். கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளும் வைபவத்தில் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளியபோது ''கோவிந்தா... கோவிந்தா...'' என்று பக்தர்கள் பரவசத்துடன் கோஷமிட்டனர். பக்தர்களின் கோஷம் விண்ணைப் பிளந்தது.

அதன் தொடர்ச்சியாக இன்று (13) செவ்வாய்க்கிழமை காலை அங்கிருந்து வண்டியூர் வைகை நடுவேயுள்ள தேனூர் மண்டபத்தில் எழுந்தருளும் கள்ளழகர் மண்டூக முனிவருக்கு சாபவிமோசனமும் நாரைக்கு முக்தியும் அளிக்கிறார்.

அங்கிருந்து இரவில் இராமராயர் மண்டகப்படிக்கு சென்று எழுந்தருளியதும் விடிய விடிய தசாவதாரம் நிகழ்ச்சி நடைபெறுகிறது. புதன் கிழமை (14) இராமராயர் மண்டகப்படியிலிருந்து புறப்பாடாகி வைகை திருக்கண், ஆழ்வார்புரம், கோரிப்பாளையம் வழியாக தல்லாகுளம் சேதுபதி மண்டகப்படியில் கள்ளழகர் எழுந்தருள்வார். நாளை (14) இரவு பூப்பல்லக்கில் எழுந்தருளும் கள்ளழகர், நாளைமறுதினம் (15) காலை அழகர்மலை நோக்கி பல்லக்கில் புறப்பாடாகிறார்.

# இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தப் பேச்சு ஆரம்பம்!

## முப்படைத் தளபதிகள் - அமைச்சர்களுடன் பாரதப் பிரதமர் மோடி மீண்டும் ஆலோசனை

இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட நிலையில், இரு நாடுகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கான இயக்குநர் ஜெனரல்கள் இடையே நேற்று (12) பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளது.

இப்பேச்சுவார்த்தையில் இந்தியா சார்பில் டி.ஜி.எம்.ஓ. லெப்டினன்ட் ஜெனரல் ராஜீவ் ராய், பாகிஸ்தான் டி.ஜி.எம்.ஓ. காஷிஃப் அப்துல்லாஹ் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

பயங்கரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு பாகிஸ்தானை வலியுறுத்த இந்தியா திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**முப்படைத் தளபதிகள் - அமைச்சர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை**

இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டு, இரு நாட்டு இராணுவ அதிகாரிகள் இடையே பேச்சுவார்த்தைத் தொடங்கியுள்ள நிலையில், பாதுகாப்பு தொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று (12) ஆலோசனை மேற்கொண்டார்.

டில்லியிலுள்ள பிரதமர் இல்லத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் (NSA) அஜித் டோவல், பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் அனில் சௌகான், விமானப்படைத் தளபதி ஏ.பி.சிங், இராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி, கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே.திரிபாதி, வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**பஹல்காம் தாக்குதல்**

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமிலுள்ள பைசரன் பள்ளத்தாக்கு பகுதியில் ஊடுருவிய பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடந்த 22ஆம் திகதி கொடூரத் தாக்குதல் நடத்தி சுற்றுலாப் பயணிகள் உட்பட 26 பேரை சுட்டுக் கொன்றனர்.

**'ஒபரேஷன் சிந்தூர்'**

இதற்கு பதிலடியாக 'ஒபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை இந்திய இராணுவம் கடந்த 07ஆம் திகதி மேற்கொண்டு, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியிலுள்ள 09 தீவிரவாத முகாம்கள் மீது குண்டுகளை வீசியது. இதில், 100க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

மறுநாள், ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநிலங்களிலுள்ள 15 முக்கிய நகரங்களை குறிவைத்து ஏவுகணை மற்றும் 400 ட்ரோன்களை ஏவி பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது.

இதனையடுத்து, இந்தியா தனது அதிநவீன ஆயுதங்களான எல்-70 பீரங்கி, சில்கா பீரங்கி, எஸ்-400 (சுதர்சன சக்கரம்) உள்ளிட்டவற்றால் பாகிஸ்தானுக்கு கடுமையாக பதிலடி கொடுத்தது.

பாகிஸ்தான் வீசிய ட்ரோன்கள், ஏவுகணைகளை இந்தியப் படைகள் வெற்றிகரமாக நடுவானிலேயே தகர்த்து அழித்து, பாகிஸ்தானின் பதில் தாக்குதலை முறியடித்தன. பாகிஸ்தானின் 03 முக்கிய விமான தளங்கள் உட்பட 08 இராணுவ மையங்களை குறிவைத்து, இந்தியப் போர் விமானங்கள் கடந்த 10ஆம் திகதி காலை தாக்குதல் நடத்தின. இதில் பாகிஸ்தானுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

இந்நிலையில், இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் தீவிரமடைந்ததால், அமெரிக்க அதிகாரிகள்



தலையிட்டு உடனடியாக போர் நிறுத்தம் செய்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர். போர் நிறுத்தத்துக்கு பாகிஸ்தான் சம்மதம் தெரிவித்ததையடுத்து, இந்தியாவும் சம்மதம் தெரிவித்தது. இதையடுத்து, போர் நிறுத்தம் குறித்த அறிவிப்பை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்டார். அதைத் தொடர்ந்து, இந்தியா மற்றும் பாகிஸ்தானும் போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டன.

இதையடுத்து, பிரதமர் மோடி தலைமையில் நேற்றுமுன்தினம் (11) நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், போர் நிறுத்த ஒப்பந்தத்தை பாகிஸ்தான் மீறினால், தக்க பதிலடி கொடுக்குமாறு முப்படைகளுக்கும் பிரதமர் மோடி உத்தரவிட்டார். தீவிரவாத ஊடுருவலை முற்றிலும் தடுப்பதற்கான வழிகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

இந்தப் பின்னணியில், நேற்றும் (12) பிரதமர் மோடி தலைமையில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**10 செயற்கைக்கோள்கள் மூலம் கண்காணிப்பு**

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான மோதல் சற்று தணிந்திருக்கும் நிலையில், நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய 10 செயற்கைக்கோள்கள் 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருவதாக இஸ்ரோ தலைவர் வி. நாராயணன் தெரிவித்துள்ளார்.

# துருக்கியில் நாளைமறுதினம் புட்டினுக்காக நான் காத்திருப்பேன்

## நேரடி பேச்சுக்கான அழைப்பையேற்ற ஸெலென்ஸ்கி அறிவிப்பு

''ரஷ்ய ஜனாதிபதி புட்டினை சந்தித்து நேரடி பேச்சுவார்த்தை நடத்த தயார்'' என உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி அறிவித்துள்ளார்.

இது குறித்து, ஸெலென்ஸ்கி வெளியிட்டுள்ள பதிவில்,

''இராஜதந்திரத்துக்குத் தேவையான அடிப்படையை வழங்க, நாளை முதல் தொடங்கும் முழுமையான மற்றும் நீடித்த போர்நிறுத்தத்துக்காக நாங்கள் காத்திருக்கிறோம். நாளைமறுதினம் (15) வியாழக்கிழமை துருக்கியில் புட்டினுக்காக நான் காத்திருப்பேன். தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்துவோம்.

இம்முறை சாக்குப்போக்குகளைத் தேட மாட்டார் என்று நம்புகிறேன்'' - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



ரஷ்யா- உக்ரைன் இடையே போர் இன்று (13) 1,174ஆவது நாளாகவும் தொடரும் நிலையில் இப்போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இரு தரப்பிலும் தீவிர பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம், அமைதியை நோக்கி செல்வதற்கான தீவிர பேச்சுவார்த்தை நடத்த தயார். நாளைமறுதினம் (15) பேச்சுவார்த்தை நடத்தலாம் என ரஷ்ய ஜனாதிபதி புட்டின் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் அழைப்பை உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி ஏற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

## முடிவுக்கு வந்த வர்த்தகப் போர்:

# பரஸ்பர வரிகளை குறைக்க சீனா - அமெரிக்கா ஒப்புதல்!



வர்த்தகப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையிலும் 90 நாட்களுக்கு பரஸ்பர வரிகளை அமெரிக்கா, சீனா ஆகிய இருநாடுகளும் திரும்பப் பெற ஒப்புக்கொண்டுள்ளன. அதேநேரத்தில் பரஸ்பர வரிகளை குறைக்க இரு நாடுகளும் ஒப்புதல் அளித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றுக்கொண்ட ட்ரம்ப், தங்களுக்கு வரி விதிக்கும் நாடுகளுக்கு அதேயளவு வரி விதிக்கப்படும் என்று எச்சரித்தார். அடுத்தடுத்து சீனாவுக்கு வரி மேல் வரி விதித்தார். சீனாவும் பதிலுக்கு வரி விதிக்கத் தொடங்கியது. இதனால் அமெரிக்கா சீனாவின் பொருட்களுக்கு இறக்குமதி வரியை 145 சதவீதமாக அதிகரித்தது.

சீனாவும் அமெரிக்கப் பொருட்களுக்கான இறக்குமதி வரியை, 125 சதவீதமாக உயர்த்தியது. இதனால் இரு நாடுகளுக்கிடையே வர்த்தகப் போர் உச்சத்தில் இருந்தது. இந்நிலையில், தற்போது வர்த்தகப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் வகையிலும் 90 நாட்களுக்கு பரஸ்பர வரிகளை திரும்பப் பெற சீனா, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன.

மேலும், அமெரிக்கா சீனப் பொருட்களுக்கான வரிகளை 145 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாக குறைக்கவும் சீனா அமெரிக்க பொருட்களுக்கான இறக்குமதி வரியை 125 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக குறைக்கவும் முடிவு செய்துள்ளது. இந்த முடிவு, சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவாவில் நடந்த வர்த்தகம் தொடர்பான கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

# கொங்கோவில் கடும் மழை - வெள்ளம்:

## 100பேர் உயிரிழப்பு; 50 பேர் மாயம்



கொங்கோவில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளப்பெருக்கில் சிக்கி 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன் 50க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொங்கோ ஜனநாயக குடியரசின் கிழக்கு மாகாணமான கிவுவில் கடும் மழை பெய்த நிலையில் நங்கன்ஜா நகரிலுள்ள டாங்கன்யிகா உட்பட பல ஏரிகள் நிரம்பி கரை உடைப்பெடுத்ததில் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதனால் ஏரிக்கரையோரம் அமைந்துள்ள கசாபா கிராமத்தை வெள்ளம் அடித்துச் சென்றது. இதில் அங்கிருந்த பல வீடுகள் இடிந்து தரைமட்டமாகியுள்ளதுடன் கட்டட இடிபாடு மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி பலர் அடித்துச் செல்லப்பட்டனர். இதனையடுத்து, மீட்புப் பணி துரிதப்படுத்தப்பட்டது. இதில் மீட்புப் படையினருக்கு உதவியாக உள்ளூர் மக்களும் இணைந்தனர். அவர்கள் படகுகள் மூலம் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றினர்.

எனினும், இதுவரை நடைபெற்ற மீட்புப் பணியில் 100க்கும் மேற்பட்டோர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன் 50க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதற்கிடையே வெள்ளப்பெருக்கால் மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. இதனால் மீட்புப் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கொத்மலை பஸ் விபத்தில் காயமடைந்தோரை நேரில் சென்று பார்வையிட்ட பிரதமர் ஹரிணி



கொத்மலை, ரம்பொடை, கரண்டியெல்ல பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (11) பஸ் ஒன்று சுமார் 500 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்ததோடு, பலர் காயமடைந்தனர்.

காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களின் நிலைமைகளை ஆராய நேற்று முன்தினம் (11) மாலை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கம்பளை மற்றும் பேராதனை ஆகிய வைத்தியசாலைகளுக்கு விஜயம் மேற்கொண்டார்.

அங்கு, தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் சிகிச்சை பெறும் அனைத்து நோயாளிகளுக்கும் உடனடி சிகிச்சையளிக்கத் தேவையான வசதிகள் குறித்து பிரதமர் விசேட கவனஞ்செலுத்தினார்.

சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பிரதமர்,

''இது மிகவும் துன்பகரமான நிகழ்வு. இது போன்ற விடயங்களைத் தாங்கிக்கொள்வது மிகவும் கடினமானதாகும். சிறுவர்கள், பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களை இழந்திருப்பது வேதனையானது. எமது நாட்டில் தினமும் ஏராளமான விபத்துகள் ஏற்படுகின்றன. இவற்றைத் தடுக்க எமது போக்குவரத்து அமைச்சர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்த நேரத்தில், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் நோயாளர்களுக்கு உடனடி சிகிச்சையளித்துவருகின்ற எமது மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். அதேபோன்று தங்கள் எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, நோயாளர்களை மருத்துவமனைகளுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்த அனைவரையும் அந்த மனிதாபிமானப் பணியை முன்னெடுத்த அனைவரையும் நான் நினைவுகூர விரும்புகிறேன். இதுதான் எமது நாட்டின் தனித்துவம். இந்த மனிதப் பண்புகளை நாம் பாதுகாக்க வேண்டும். இந்த நேரத்தில், அரசாங்கம் முடியுமான அனைத்தையும் செய்வதை உறுதி செய்வதற்காக நாங்கள் தலையிடுகிறோம் என்று நான் கூற விரும்புகிறேன்''- என்றார்.

இந்நிகழ்வில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவும் கலந்து கொண்டார்.

# தம்பியின் மண்வெட்டி தாக்குதலில் அண்ணன் பலி

## லிந்துலையில் சம்பவம்

(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா - லிந்துலை பிரதேசத்திலுள்ள வீடொன்றில் தனது அண்ணனை தம்பி மண்வெட்டியால் தாக்கிக் கொலை செய்துள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொலைச் சம்பவம் கடந்த சனிக்கிழமை (10) இடம்பெற்றுள்ளது.

கொலைசெய்யப்பட்டவர் லிந்துலை பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடையவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கொலை செய்யப்பட்ட அண்ணனும் சந்தேக நபரான தம்பியும் ஒரே வீட்டில் வசித்து வந்துள்ளனர். சம்பவதினத்தன்று அண்ணனுக்கும் தம்பிக்குமிடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறு எல்லை மீறியதால் கோபமடைந்த தம்பி தனது அண்ணனை மண்வெட்டியால் தாக்கிக் கொலை செய்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், சந்தேக நபரான தம்பியைக் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆறுமாத காலத்துக்குள் தமது செல்வாக்கில் வீழ்ச்சி கண்ட அரசு

## முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(ஜே.எம்.ஹாபீஸ்)



தற்போதைய அரசு எவ்வளவு தூரம் தமது சேவை பற்றித் தெரிவித்துக்கொண்டாலும் ஆறுமாத காலத்தில் அவர்களது செல்வாக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக முன்னாள் அமைச்சரும் கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சட்டத்தரணி லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் (11) இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமக்கு அதிக ஆதரவு கிடைத்திருப்பதாக அவர்கள் எவ்வளவு புகழ்பாடினாலும், கடந்த தேர்தல் முடிவுகளின் படி அவர்கள் ஆறுமாத காலத்துக்கு முன்பெற்ற வாக்குகளை விடவும் குறைந்த வாக்குகளையே பெற்றுள்ளனர்.

அதாவது, அரசு கடந்த தேர்தலை விட இம்முறை சுமார் 23 இலட்சம் வாக்குகளால் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த தேர்தலில் வாக்களித்த 23 இலட்சம் மக்கள் இம்முறை அவர்களுக்கு வாக்களிக்கத் தவறியுள்ளனர். ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி கடந்த தேர்தலை விட இம்முறை கூடுதல் வாக்குகளைப் பெற்றுள்ளது.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது மாகாண சபைத் தேர்தலொன்று நடத்தப்பட்டால் அதில் தற்போதைய ஆட்சியாளர்கள் தோல்வியடைவது நிச்சயம். எதிர்வரும் மாகாண சபைக்கு நாம் மிகவும் பலம் பொருந்திய ஓர் இளைஞரை முதலமைச்சராக்கத் திட்டமிட்டுள்ளோம்.

அதேநேரம், கண்டி மாநகர சபைக்கு பட்டியலில் உள்ளவர்கள் எமது கட்சியால் நியமிக்கப்படவுள்ளனர். எமது கட்சியில் தமது வட்டாரத்தில் தோல்வியடைந்தவர்கள் ஆனால், கூடுதல் வாக்குகளைப் பெற்றவர்கள் என்ற அடிப்டையில் முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும். அந்த அடிப்படையில் அவ்விடங்கள் வழங்கப்படும். அதாவது, தோல்வியடைந்தவர்களில் அதிக வாக்குகள் பெற்றவர்கள் என்ற அடிப்படையில் அவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்''- என்றார்.

# வெசாக் அலங்காரத்தில் ஈடுபட்ட சிறுமி மின்சாரம் தாக்கிப் பலி



வெசாக் பண்டிகையை முன்னிட்டு தனது குடும்பத்தினருடன் இணைந்து வீட்டை அலங்கரித்துக்கொண்டிருந்த சிறுமியொருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக மொரகஹஹேன பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் களுத்துறை, மொரகஹஹேன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மில்லேவ பிரதேசத்தைச் சேர்ந்த 9 வயதுச் சிறுமியாவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

சம்பவத்தன்று உயிரிழந்த சிறுமி வெசாக் பண்டிகையை முன்னிட்டு தனது குடும்பத்தினருடன் இணைந்து வீட்டை பல வர்ண மின்கலங்களால் அலங்கரித்துக்கொண்டிருந்துள்ளார்.

பின்னர் இந்தச் சிறுமி பல வர்ண மின்கலங்களுக்கு மின்சாரத்தை வழங்க முயற்சித்தபோது மின்சாரம் தாக்கி காயமடைந்துள்ளார்.

காயமடைந்த சிறுமி பாதுக்கை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மொரகஹஹேன பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐஸுடன் ஒருவர் கைது

(ஜே.எம்.ஹாபீஸ்)

கண்டி, தெல்தெனிய பிரதேசத்தில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருள் விநியோகம் செய்வதாகப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் ஒருவரை போதைப் பொருளுடன் பொஸிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்படி தெல்தெனிய பொலிஸார் அம்பகஹலந்த பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஐஸ் போதைப் பொருள் 20 மில்லி கிராமுடன் மேற்படி சந்தேக நபரைக் கைதுசெய்தனர்.

குறித்த சந்தேக நபர் கொழும்பிலிருந்து போதைப்பொருளைக் கொண்டு சென்று தெல்தெனிய, திகன போன்ற பிரதேசங்களில் விற்பனை செய்வதாகத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



கண்டி, தெல்தெனிய, கும்புக்கந்துறை அஹதிய்யா பாடசாலையில் இடம்பெற்ற மாதாந்த ஒன்றுகூடலில் அஹதிய்யா மாணவ மாணவிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர். (ஜே.எம்.ஹாபீஸ்)

# உள்ளூராட்சித் தேர்தலில் கடந்த அரசாங்கங்கள் பெறாத வெற்றியை நாம் பெற்றுள்ளோம்

## இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு

(சாவகச்சேரி நிருபர்)



''கடந்தகால அரசாங்கங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் பெற்றிராத ஒரு மகத்தான வெற்றியை தேசிய மக்கள் சக்தி இந்த உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பெற்றுள்ளது. அந்த வகையில், கடந்த பாராளுமன்றத் தேர்தல் வெற்றியைப்போன்று இதுவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட வரலாற்று வெற்றியேயாகும்'' - என யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மீதான அலை ஆறே மாதங்களில் ஓய்ந்துவிட்டதாக சிலர் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். தமது தோல்வியை மறைக்கவே அவர்கள் இவ்வாறான விமர்சனத்தை முன்வைக்கின்றனர்.

கடந்த கால அரசாங்கங்கள் உள்ளூராட்சித் தேர்தலில் இவ்வளவு ஆசனங்களைப் பெற்றிருக்கவில்லை.

தமிழ்க் கட்சிகள் அஞ்சும் அளவுக்கு கடந்த அரசாங்கங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் கால்தடம் பதிக்கவில்லை. ஆனால், தேசிய மக்கள் சக்தி ஒன்றே தமிழ்க் கட்சிகளுக்கு தோல்விப் பயத்தைக் காட்டியுள்ளது. பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் அவர்கள் மனதில் இன்றும் ஓடிக்கொண்டிருக்குமென நினைக்கிறேன்.

உள்ளூராட்சித் தேர்தலில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து சபைகளிலும் முதற்றடவையாக நாம் போட்டியிட்டோம். முதல் தடவையிலேயே 20 சதவீதமான ஆசனங்களைக் கைப்பற்றி தமிழ்க் கட்சிகளுக்கு மிகப்பெரிய சவாலை ஏற்படுத்தியுள்ளோம்.

தமிழ்க் கட்சிகள் கடந்த காலத்தைப்போன்று தனியொரு கட்சி ஆட்சியமைக்க முடியாமல் போகக் காரணம் எமது வெற்றியே. எமது ஆதிக்கம் காரணமாகவே கடந்த காலத்தில் சுயநலத்துக்காகப் பிளவடைந்த தமிழ்க் கட்சிகள் இன்று ஒன்றுசேரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 2018இல் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய கட்சிகள் வட்டாரத்தை வென்றமை மிக அரிது. ஆனால், நாம் நேரடியாகவே பல வட்டாரங்களை வென்றுள்ளோம். காலாகாலமாக தேசியம் பேசி மக்களை ஏமாற்றியவர்களைத் தோற்கடித்துள்ளோம்.

எமது வேட்பாளர்கள் பரம்பரை பரம்பரையாக அரசியல் செய்தவர்கள் அல்லர். அவர்கள் அரசியலுக்குப் புதியவர்கள். ஆனால், நேர்மையானவர்கள். பெரும்பாலும் இளைஞர்களுக்கு வாய்ப்பளித்தோம்.

இந்த வெற்றி எமக்கு மிகப்பெரிய ஒரு வரலாற்று வெற்றி. அதேநேரம், தமிழ்த் தேசியம் பேசுபவர்களுக்கு பாராளுமன்றத் தேர்தல்போன்று இதுவும் ஒரு பலத்த அடி என்பதை அவர்கள் நினைவிற்கொள்ள வேண்டும்'' – என்றார்.

# தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக மக்கள் போராட்டம்



(பு.கஜிந்தன்)



சட்டவிரோதமாக மக்களது காணிகளைச் சுவீகரித்து கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கெதிரான போராட்டமானது நேற்று (12) ஆரம்பமாகியது.

குறித்த விகாரை அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்துவரும் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அந்தவகையில், இந்தப் போராட்டமானது நடைபெறுகிறது.

போராட்டம் நடைபெறும் இடத்தில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். வழமைபோல் பொலிஸார் போராட்டக்காரர்களுக்கு இடையூறு விளைவித்தவண்ணம் உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

# வட்டுக்கோட்டையில் மாணவனை தாக்கிய ஆசிரியருக்கு விளக்கமறியல்

(யாழ். நிருபர்)

மாணவனைத் தாக்கிய குற்றச்சாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை (09) கைதுசெய்யப்பட்ட ஆசிரியரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டை,சித்தங்கேணிப் பகுதியில் தனியார் கல்வி நிறுவனமொன்றில் கற்றுவரும் மாணவனொருவர் பட்டப் பெயர் கூறி அழைத்ததாகத் தெரிவித்து மாணவரை ஆசிரியர் வகுப்புவேளையில் அடித்துத் தாக்கியுள்ளார்.

இந்நிலையில், மாணவனின் பெற்றோர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய ஆசிரியர் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன்போது கைதுசெய்யப்பட்ட தனியார் கல்வி நிலைய ஆசிரியரை எதிர்வரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி வாழ்க்கைத்தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்

## சுபோதினி தயாளரசன் தெரிவிப்பு

(சாவகச்சேரி நிருபர்)



''சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்து அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்'' - என சாவகச்சேரி நகரசபையின் கோவிற்குடியிருப்பு கடல் வட்டாரத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய திருமதி சுபோதினி தயாளரசன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்படி கருத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபை வரலாற்றில் முதற்றடவையாக ஒரு பெண் வேட்பாளராக நேரடியாக மக்களின் ஆதரவுடன் நான் வெற்றி பெற்றுள்ளேன். கடந்த சபையிலும் நான் அங்கம் வகித்து கிராமத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்திருந்தேன்.

அந்த அடிப்படையில் மக்கள் மீண்டும் ஒரு வாய்ப்பை எனக்கு வழங்கியுள்ளனர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அடுத்த நான்கு வருட காலங்களுக்கு கிராமத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.

குறிப்பாக, சிறுவர்களுக்கான கல்வி மேம்பாடு, சத்துணவு மற்றும் பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்புகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்துவேன்'' – என்றார்.

# கோப்பாய் வைத்தியசாலை ஊழியர் வாந்தி எடுத்து மரணம்

(யாழ். நிருபர்)

கோப்பாய் வைத்தியசாலையில் பணிபுரிந்த சிற்றூழியரொருவர் நேற்று முன்தினம் வாந்தி எடுத்து உயிரிழந்துள்ளார்.

நீர்வேலி, பூதர்மட ஒழுங்கையைச் சேர்ந்த குணரத்தினம் குணாதரன் (வயது 41) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் நேற்றுமுன்தினம் வாந்தி எடுத்துள்ளார். இந்நிலையில், உறவினர்கள் அவரை கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதித்தனர். இருப்பினும், சிகிச்சை பலனின்றி அவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.


மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இதய நோய் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

# அம்ஷிகா மீதான வன்கொடுமைக்கு உடந்தையானவர்கள் மீது நடவடிக்கை அவசியம்

## சமாதானத்துக்கான இளைஞர் பேரவை ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ். நிருபர்)

மாணவி டில்ஷி அம்ஷிகா மீதான வன்கொடுமைக்கு உடந்தையாக இருந்தவர்களுக்கு உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி சமாதானத்துக்கான இளைஞர் பேரவை ஜனாதிபதிக்கு கடிதமொன்று அனுப்பி வைத்துள்ளது. அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கொழும்பு இராமநாதன் இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற மாணவி டில்ஷி அம்ஷிகா கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதியன்று ஐந்தாம் மாடியிலிருந்து கீழே விழுந்து தன் உயிரை மாய்த்துக்கொண்டார். இச்சம்பவத்துக்கு அதாவது அவர் மீதான வன்கொடுமைக்கு உடந்தையாக இருந்தவர்களுக்கு உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.சிறுவர்கள், பெண்களுக்கு ஏற்படும் வன்கொடுமைகள் தொடர்பான சட்டங்கள் கடுமையானதாக மாற்றப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


YOUTH FOR PEACE COUNCIL (Y4PC)



# 16ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் ஐ.பி.எல். 2025?

## இறுதிப்போட்டியை கொல்கத்தாவிலிருந்து அஹமதாபாத்துக்கு மாற்றவும் திட்டம்

இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவிய போர் பதற்றத்தால் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்ட நடப்பு ஐ.பி.எல். தொடரின் எஞ்சிய போட்டிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இன்னும் 12 லீக் மற்றும் 4 பிளே-ஓப் சுற்று என மொத்தம் 16 ஆட்டங்களை நடத்த வேண்டியுள்ளது. சில தினங்களுக்கு முன்னர் இரு நாடுகளும் போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டன. இதன் காரணமாக ஐ.பி.எல். போட்டியை மீண்டும் ஆரம்பிக்க இந்திய கிரிக்கெட் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதையொட்டி ஐ.பி.எல். நிர்வாக குழு உறுப்பினர்களும் கிரிக்கெட் சபை நிர்வாகிகளும் ஆலோசனை நடத்தினர். இந்நிலையில், இந்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி, எதிர்வரும் 16 அல்லது 17ஆம் திகதிகளில் போட்டி மீண்டும் ஆரம்பமாகும் எனவும் கடந்த 09ஆம் திகதி லக்னோவில் நடைபெறவிருந்த பெங்களூரு - லக்னோ ஆட்டத்தில் இருந்து போட்டிகள் ஆரம்பமாகும் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. தங்கள் அணி வீரர்களை திரும்ப அழைக்கும்படி 10 அணி நிர்வாகங்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மீதமுள்ள ஆட்டங்கள் அநேகமாக 3 இடங்களில் நடத்தப்படும். இறுதிப்போட்டிக்கான முதலாவது தகுதி சுற்று மற்றும் வெளியேற்றுதல் போட்டி நடைபெறும் ஹைதராபாத்தில் மாற்றம் இல்லை. ஆனால் இறுதிப்போட்டியை கொல்கத்தா ஈடன் கார்டனில் நடத்துவதில் சிக்கல் உள்ளது. இறுதிப்போட்டி கொல்கத்தாவில் இருந்து அஹமதாபாத்துக்கு மாற்றப்படலாம் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. புதிய அட்டவணைப்படி மே 31 அல்லது ஜூன் 01ஆம் திகதி இறுதிப்போட்டி நடைபெற வாய்ப்புள்ளது.




# பீபா மகளிர் உலகக்கிண்ண தொடரின் அணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

2031 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பீபா மகளிர் உதைபந்து தொடரில் கலந்துகொள்ளும் அணிகளின் எண்ணிக்கையை உயர்த்த பீபா முடிவெடுத்துள்ளது. அதன்படி வழக்கமாக கலந்துகொள்ளும் 32 அணிகளில் இருந்து 48 ஆக அதிகரிக்க முடிவெடுத்துள்ளது.

12 பிரிவுகள் கொண்டதாக அணிகள் பிரிக்கப்படவுள்ளன. மேலும் ஆட்டங்களின் எண்ணிக்கை 64-லிருந்து 104 ஆக அதிகரித்துள்ளது. இருப்பினும் 2027ல் பிரேசிலில் நடைபெற உள்ள மகளிர் உலகக்கிண்ணத் தொடரில் இது பொருந்தாது என்றும் பீபா அறிவித்துள்ளது.

2031ஆம் ஆண்டு மகளிர் உலகக்கிண்ண தொடர் நடைபெறும் இடம் உத்தியோகபூர்வமாக இன்னும் அறிவிக்கப்படவில்லை. இருப்பினும் தொடரை நடத்த அமெரிக்கா மட்டுமே விருப்பம் தெரிவித்திருப்பதால் அமெரிக்காவிலேயே நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து விராட் கோஹ்லி ஓய்வு






சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோஹ்லி அறிவித்துள்ளார் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தனது ஓய்வு அறிவிப்பை வெளியிட்டுள்ள விராட் கோஹ்லி, “இந்தியாவுக்காக டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட ஆரம்பித்து 14 ஆண்டுகள் ஆகின்றன. உண்மையைச் சொன்னால், இந்த வடிவம் என்னை அழைத்துச் செல்லும் பயணம் என்று நான் ஒருபோதும் நினைத்துப் பார்த்ததில்லை. அது என்னை சோதித்தது, என்னை வடிவமைத்தது. மேலும் நான் வாழ்நாள் முழுவதும் நினைவில் வைத்திருக்கும் பாடங்களைக் கற்றுக் கொடுத்தது. வெள்ளை நிற ஜெர்சியில் விளையாடுவது தனிப்பட்ட முறையில் தனது மிகவும் பிடித்தமானது" என்று தெரிவித்துள்ளார். விராட் கோஹ்லி இந்திய அணிக்காக 123 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 9230 ஓட்டங்களை குவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# பண்டெஸ்லிகா சம்பியன் பட்டம் பாயர்ன் முனிக் வசம்

ஜேர்மனியில் நடைபெற்ற புகழ்பெற்ற பண்டெஸ்லிகா உதைபந்து லீக் தொடரின் சம்பியன் பட்டத்தை பாயர்ன் முனிக் அணி கைப்பற்றியது. இது பாயர்ன் முனிக் அணியின் 33ஆவது பண்டெஸ்லிகா பட்டம் ஆகும். பாயர்ன் முனிக் லீக் தொடரின் கடைசி ஆட்டத்தில் போருஷ்யா அணியுடன் மோதியது. நட்சத்திர வீரர் தோமஸ் முல்லரின் கடைசி ஆட்டம் என்பதால் ஆரம்பம் முதலே பாயர்ன் முனிக் அணியினர் ஆதிக்கம் செலுத்தினர். இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் போருஷ்யா அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வசப்படுத்தினர். விடைபெற்றுச் சென்ற ஜேர்மனின் நட்சத்திர வீரர் தோமஸ் முல்லருக்கு இது 13வது பண்டெஸ்லிகா சம்பியன் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்ற இந்தியா




இந்திய, இலங்கை மற்றும் தென்னாபிரிக்க மகளிர் கிரிக்கெட் அணிகள் மோதிய முக்கோண மகளிர் ஒருநாள் சர்வதேச தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கையை 97 ஓட்டங்களால் வீழ்த்திய இந்திய அணி சம்பியன் பட்டம் வென்றது.

அடுத்து நடைபெறவுள்ள மகளிர் ஒருநாள் உலகக்கிண்ணத் தொடருக்கு தயாராகும் விதத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட குறித்த தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்றது.

இலங்கை - இந்திய அணிகள் மோதிய இறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இந்தியா முதலில் துடுப்பாடி 50 ஓவர்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்து 342 ஓட்டங்களை எடுத்துக் கொண்டது. 343 ஓட்டங்களை அடைய பதிலுக்கு ஆடிய இலங்கை மகளிர் அணி 48.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்கள் மட்டும் எடுத்து போட்டியில் தோல்வியடைந்தது. போட்டியின் ஆட்டநாயகியாக சதமடித்த ஸ்மிருத்தி மந்தனாவும் தொடர் நாயகனாக எஸ். ரானாவும் தெரிவாகினர்.

தற்போது விற்பனையில்...
மாணவர்களின் கல்வி வழிகாட்டியான
ஜீனியர் தமிழன்
மே மாத சஞ்சிகைகள்
பாடசாலை பாடத்திட்டத்தின்படி,
தவணைகளின் அடிப்படையில்,
தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுக்கப்பட்டு
வெளிவருகின்றன.




மேலதிக விபரங்களுக்கு :
011 5 200 900 | 074 1684643 | 0777 983308 | Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo –07